எழுத்து

பிப்ரவரி 63 ஐந்தாம் ஆண்டு 50 காசு

ஆசிரியர் : சி. சு. செல்லப்பா

எந்த தமிழ் ?	தலையங்கம்	26
மனிதாபிமானி விமர்சகன்		27
பல்கலை கழகத்தில் விமர்சகன்	ஜான் வெயின்	28
எழுத்து கவியரங்கம் ந. பிச்சமூர்த்தி, சி. மணி தி. சோ. வேணுகோபாலன், டி. கே. துரைஸ்வாமி எஸ். வைத்தீஸ்வரன், க. ச. ராமமூர்த்தி		31
சுமை	வ. சௌந்தரபாண்டியன்	35
படுக்க ஒரு இடம்	ஜான் ஹீத்ஸ்டப்ஸ்	38
சில்லரை	லட்சுமிபதி	39
எழுத்து அரங்கம்	தருமசிவராமு	42
முக்தி	ம. நா. ராமசாமி	44

50

எந்த தமிழ்?

நரி வலம்போனால் நல்லது இடம் போனால் நல்லது என்று பார்ப்பதைவிட இரண்டும் வேண்டாம் மேலே விழுந்து பிடுங்காமல் போனால் அதுவே போதும் என்ற மாதிரிதான் இந்த புலவர்களை (?) புலவர்களைத் தாங்கிப் பேசுபவர்களையும் பற்றி சொல்லத் தோன்றுகிறது. தற்கால தமிழ் எழுத்தாளர்களுக்கு அவர்கள் உபதேசம் செய்யவும் வேண்டாம் அவர்களை கண்டிக்கவும் வேண்டாம் பேசாமல் தங்கள் 'பேடண்ட்' ஆராய்ச்சிகளில், பள்ளிப் போதனைகளில் மூழ்கி இருக்கட்டும் என்றுதான் சொல்வோம். இதனால் யோசனையையோ, திருத்தப்படுவதையோ எழுத்தாளர்கள் விரும்பவில்லை என்று ஆகிவிடாது. இந்த புலவர்கள் கூறும் புத்திமதிகளைப் பற்றித்தான் பேச்சு. சென்ற ஆண்டு இறுதிநாளில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மகாநாடு சென்னையில் நடந்தபோது இந்த மாதிரி புத்திமதிகள் புலவர்களால், அவர்களை தாங்குபவர்களால் சபைமுன் உட்கார்ந்திருந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டன.

'பேசுவதுபோல எழுதவேண்டும்' என்று சொல்லுகிறார்கள். அப்படி சொல்பவர்களிடம் யார் பேசுவதுபோல எழுதுவதுபோல எழுதவேண்டும் என்று கேளுங்கள். 'இஸ்துக்கினு' என்கிறார்களே அந்த பேச்சுப் போக்கிலா, இல்லை அம்மாமி அத்திம்பேர் பேசுகிற மாதிரியா என்று கேளுங்கள். பதில் பேசாமல் ஓடியே போய்விடுவார்கள்' என்று திரு கி. ஆ. பெ. விஸ்வநாதம் கூறி கரகோஷம் பெற்றார். அவரை தொடர்ந்து பேசிய மகாவித்வான் திரு. வேணுகோபால் பிள்ளை ஒருபடி முன்னே சென்று, பேசுவது போல எழுதவேண்டும் என்கிறார்கள். அது சரியல்ல. எழுதுவது போல பேசவேண்டும் என்று கூறினார்.

இந்த இரண்டு கருத்துக்களையும் கேட்டவர்களுக்கு இதில் என்ன ஆட்சேபிக்க இருக்கிறது. நல்ல தமிழில் பேசவேண்டும் எழுதவேண்டும் என்கிறார்கள் அது சரியானதுதானே என்றுதான் மேலாகத் தோன்றும். ஏனென்றால் நல்ல தமிழ் தூய தமிழ் என்ற கோஷத்துக்குள் எந்த நச்சுக் கருத்தையும் திணித்துவிடலாம் அல்லவா?

பேசுவதுபோல எழுதவேண்டும் என்றால் அது கொச்சைப் பேச்சுப் போக்கில்தான் எழுதவேண்டும் என்று எப்படி இவர்கள் முடிவுக்கு வந்தார்கள். கொச்சைக்கு உபயோகம் எந்த இடத்தில் உண்டு என்பது படைப்பாளிக்குத் தெரியும். கதைகளில் வரும் சம்பாஷணையில், கதாபாத்திரம் தன் மனப் போக்கில் அகப்பார்வையில் சிந்திக்கையில், ஏன் பிறரிடம் தான் கதை சொல்லும்போது கூட கொச்சை நடையில் அதையும் தேவைக்கு ஏற்ப அளவாகப் பயன்படுத்தியும் மெருகிட்டும் உபயோகிக்கும் பழக்கம் அவனுக்கு உண்டு. 'குளத்தங்கரை அரசமரம்' முதல் அவன் தெரிந்து உபயோகிப்பது. முழு எழுத்துப் போக்கையும் கொச்சையாக அடிக்கவேண்டும் என்று யாரும் சொன்னதில்லையே. ஆனால் பேசுகிறபடி எழுதவேண்டும் என்று சொல்லப்பட்டு வருவது உண்மைதான். அது இவர்கள் புரிந்து கொள்ளாமல் பேசுகிற 'கொச்சை' என்கிற அர்த்தத்தில் இல்லை. இந்த புலமை வாய்ந்தவர்கள் தங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளில் எழுதுகிறார்களே வாக்கியங்களை அந்த மாதிரியான எழுத்து வழியான அமைப்புப்படி இல்லாமல் பேச்சு அமைதிப்போக்கில் வாக்கியங்களை அமைத்து எழுதவேண்டும் என்பதுதான் பேசுகிற மாதிரி எழுதவேண்டும் என்பது. தங்கள் புலமையை வெளிக்காட்டும்படியான பழய, பழக்கத்தில் இல்லாத சொற்களையும், சொல்தொடர்களையும் வினைமுற்றுக்களையும் உபயோகித்து அந்த வாக்கியம் செயற்கையாக ஒலிக்கும்படி இல்லாமல், நாம் சகஜமாகப் பேசுகிற சொற்களையும், அழுத்தம், உறுத்தல், வேகம் இந்த தன்மைகளை வெளிக்காட்டும்படியாக நாம் வாக்கியங்களை திருத்தி அமைத்து இயல்பான பேச்சு குரலின் நீட்சி அளவுக்கு அமைகிற வாக்யங்களைப்போல பேச்சு ஒலிநயத்துக்கு ஏற்ப அமையும் வாக்கியங்களை அமைப்பதுதான் பேசுவது போல் எழுதுவது என்பது. சாஸர் மாதிரி எழுதாமல் ஹெமிங்வே மாதிரி எழுதும் நடைதான் உதாரணம் என்று மேல் நாட்டிலிருந்து தர முடியும். நம் தமிழில் அந்த நடை வளரவேண்டும் என்பது தான் இந்த பேச்சு வழி எழுத்து இயக்கம். கொச்சைப் போக்கான எழுத்து என அர்த்தம் கொள்வது இதுக்கு புறம்பானது, புலமை இந்த வித்யாசத்தை புரிந்து கொள்ளவேண்டும்

அதுபோகட்டும் எழுதுவதுபோல பேசவேண்டும் என்றதை பார்ப்போம். அதுக்கு பதில், 'எந்த தமிழில் எழுதவேண்டும், என்று கேளுங்கள் ஓடிப் போய்விடுவார்கள்' என்றாரே அதே ரீதியில் கேட்பதுதான். 'எழுதுவது போல பேசவேண்டும் என்கிறீர்களே. ரொம்ப சரி. யார் எழுதுவது போல பேச வேண்டும். உரையாசிரியர்கள் எழுதியது போலவா,

---

எழுத்து

ஆசிரியர் :

சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல்தேதியன்று வெளிவரும் மாத ஏடு. தனிப் பிரதி காசு 50. ஆண்டுச் சந்தா ரூ. 5-00 வெளி நாடுகளுக்கு ரூ. 6-00. சந்தா, கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (Ezhutthu) 19-A, பிள்ளையார் கோயில்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 என்ற முகவரிக்கு எழுதப்பட வேண்டும்.

5-ஆம் ஆண்டு

ஏடு 50

பிப்ரவரி - 63

இல்லை பரிதிமாற் கலைஞன், மறைமலையடிகள் போலவா, திரு வி. க., வ. ரா. போலவா, இல்லை இந்த கருத்தை சொன்னவர் கேட்டவர்கள் போலவா ('நான'இருக்க 'யான்' யான் என்றுபேசினாரே அவரைப் போலவா) எப்படி என்று கேளுங்கள் முழித்துதானே ஓடிப்போய் விடுவார்கள் என்று நாம் சொல்லலாம் அல்லவா?

ஆகவே பேசுகிறபடி எழுதவேண்டும் என்றால் கொச்சை என்று தப்பாக அர்த்தம் பண்ணிக்கொண்டு பேசுகிறது போலத்தான் இதுவும். தான் தான் எழுதுகிறபடி ஒவ்வொருவரும் பேச ஆரம்பித்தால்?...வேடிக்கைதான். பாமரன் கொச்சை எழுத்துக்கு விலக்கானால் புலவர் இலக்கணச் சுத்தமும் விலக்குத்தானே. இதுக்கு வழி சொல்லக்கூடும். எல்லோரும் ஒரே மாதிரியான நடைபேசவேண்டும். எழுதவேண்டும் சொற்களை உபயோகிக்கவேண்டும். அதுதானே? ஸ்டாண் :டர்டைஸ் செய்து விட்டுவது. ஐயா, உணர்ச்சி வெளியீடு மனிதனுக்கு இயல்பானது. அடிப்படையானது. அது உங்கள் தொல்காப்பிய, நன்னூல் 'இலக்கண சுத்த'விதிகளுக்கு அடங்கி வராது என்பதை தெரிந்துதான் பேசுகிறீர்களா? இல்லை தமாஷ் செய்கிறீர்களா கோமாளித்தனமாக என்று தான் ஒருவருக்கு கேட்கத் தோன்றும்.

ஆகவே இந்த புலமை உபதேசங்கள் படைப்பாளிக்கு தேவை இல்லை. இப்படிச் சொன்னால் அவனுக்கு இலக்கணமே தேவையில்லையாம் என்று குதித்து புறப்பட்டு விடுவார்கள். படைப்பாளி இலக்கணத்தை உடைக்க மறுக்க புறப்பட்டவன் அல்ல படைப்பாளி அனுபவத்தை, கற்பனையை உணர்ச்சியை வெளியிட முன்வருபவன். இதுவும் தன் ரத்தத்தில் ஓடும் மொழி இயல்பின் பலத்தில் சொல், வாக்கியம் இமைக்க முற்படுபவன். இந்த சொல்லும் வாக்கியமும் இவனுக்கு இப்போது அப்போது தேவைக்கு ஏற்ப, உந்துதலுக்கு ஏற்ப, சக்திக்கு ஏற்ப வந்து விழும் உருவாகும். இதில் சொல் பிரயோகம் விதவிதமாக பிறக்கும். வாக்கியம் தினுசு தினுசாக இமையும். சொல்லுக்கு இகராதியும், வாக்கியத்துக்கு இலக்கணமும் பின் பிறக்கும். இதுதான் மொழி வளர்ச்சிப்பாதை. புலவர்கள் இதைபோட்டுக் கொள்ளவேண்டும். படைப்பாளர்கள், எஸ்ரா பவுண்ட் சொன்னாரே,'சொந்தமாக எதுவும் படைக்கத் தெரியாதவன் பேச்சை காதில் போட்டுக் கொள்ளாதே' என்று, இதன்படி இந்த மாதிரி உபதேசங்களை இந்த காதில் வாங்கி அந்த காது வழியே விட்டு விடலாம்.

மனிதாபிமான நோக்கு விமர்சகன் மறைவு

தமிழ் இலக்கியத்தை விமர்சன ரீதியில் அகலமாகவும் ஆழமாகவும் பார்க்கத் தெரிந்தவர்கள் அத்திபூத்த மாதிரி இருக்கிற தமிழகத்தில் திரு. ப. ஜீவானந்தம் மறைவு ஒரு நக்ஷத்திர உதிர்வு. உடனேயோ வெகு சமீபத்திலோ ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பு. அரசியலில் ஒரு காலும் இலக்கியத்தில் ஒரு காலும் ஊன்றி இருப்பவர் சொற்பம். அந்த சொற்பத்திலும் இலக்கியத்தில் தரமான நோக்கு கொண்டிருப்பவர்கள் அரிது. அரசியலுக்குத் தேவையான அளவு இலக்கியத்தை பயன்படுத்திக் கொள்ளக் கூடியவர்கள் தான் அதிகம் கிடைக்கும். மார்க்ஸிய சித்தாந்தியான ஜீவா எந்த தமிழ் இலக்கியப்படைப்பாளியையும்-அதிலும் பாரதியை குறிப்பாக-சமுதாய எதார்த்த வாதப் பார்வைக்கு உள்ளாக்கிப் பார்ப்பதில் முனைந்தவர் தான். அது அவருக்கு அடிபடைத்தேவை. ஆனால் அவர் மனம் ஆழ்ந்து, ஊன்றி, ரசித்துப் படித்து இலக்கிய அனுபவத்தை பருகிய உள்ளம். அந்த வரையறைக்கும் மேலாக ஏம்பி நின்றது.

மனிதாபிமானப் பார்வை மார்க்ஸிய கோட்பாட்டுக்கு மட்டும் உரியது என்பது இல்லை. அது யாருக்கும் பொதுவான சொத்து. எந்த விமர்சன நோக்கிலும் அந்தச் சாயல் விழுந்தே இருக்கும். ஜீவாவின் மனிதாபிமானப் பார்வை நமது இன்றைய இலக்கிய உலகத்துக்கு, விமர்சனத் துறைக்கு ஒரு கணிசமான பங்கு செலுத்தி உள்ள ரசிக சாதனை. கம்பன் இளங்கோ, வள்ளுவர் இருக்கட்டும் இந்த நூற்றாண்டு மேதை பாரதியை 'பிரபஞ்சியக்கவி' என்று பெயரிட்டு அவர் பார்த்த பார்வையில் ஆற்றியுள்ள சொற்பொழிவுகளை, நகையில் பதிக்கிற மணிகளாக பொருந்திய, பொருத்தமான பழைய புதிய ஆக்கச் சொற்களைக் கொண்டு மடை திறந்து வெள்ளம் பாயும் போக்காக கருத்துக்களை. அரசியல் போக்காக இருந்தால் அதுக்கு ஏற்பவும், தத்துவப் பார்வையாக இருந்தால் அதுக்கு இயையவும், அழகுப் பார்வையாக இருந்தால் அதுக்கு ஒப்பவும் பிரித்துப் பிரித்தும், ஒன்று சேர்த்துப் பார்க்கக்கூடிய ஆய்வுத்திறன், மனப்பக்குவம், சொல்லாட்சி, விவகார ஞானம் காட்டிய ஒரு தனி இலக்கியரசிகனாக வாழ்ந்தவர் ஜீவானந்தம்

அவர் கருத்தை, கட்சியை முடிவுகளை ஏற்காதவர்களும் கேட்கவைக்கும் ஒரு தரமான பேச்சு அவருடையது தன் கொள்கைக்கு எதிரானவர்களிடமே கருத்துப் பரிமாறுதல் செய்து கொண்டே இருக்கவேண்டும். அதன் மூலம் தான் இலக்கிய வளம் பெரும் என்ற இடைவிடாத அவர். அவருக்கு புதுமையாக யார் சொன்னாலும் அதை பார்க்கவேண்டும் என்ற துடிப்புக்காரர் சாக இரு தினங்கள் முன் தான் நான் அவருக்கு பாரதிக்குப் பிறகு 'பிச்சமூர்த்தி சிறந்த மூற்போக்குக் கவி என்று எழுதியிருந்த கடிதத்தை படித்து விட்டு உடனே 'காட்டு வாத்து' தொகுப்பை வாங்கிச் சென்றிருக்கிறார். அவரிடம் அது பற்றிய கருத்து எதிர் பார்த்திருந்தேன். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போல ஆகிவிட்டது அவரும் எட்டாத உயரத்துக்குச் சென்றுவிட்டார். இலக்கியவிமர்சகர் ஜீவானந்தத்தை நம் மனதில் என்றைக்கும்மாக நிலைக்க வைப்பதுக்கு ஒரே வழி அவர் சூர்க்கமாக தீர்க்கமாக பார்வை செலுத்திய மனிதாபிமான நோக்கில் இலக்கியத்தை தரமாகப் பார்க்கும் ஒரு விமர்சக தொனி எதிர்காலத்தில் குரல் கொடுத்துக் கொண்டே இருப்பது தான். இன்பமாக பழகும் குணம் உள்ள அவரோடு கொஞ்சம் பழகினது எனக்கு மறக்காது.

—சி. சு. செல்லப்பா

பல்கலை கழகத்தில் இலக்கிய விமர்சகன்

ஜான் வெயின்

ஒரு விதத்தில் பத்திரிகையின் இந்த ஏட்டுக்கு நான் ஒருபுல்லுருவி போன்றவன் என்றே நினைக்கிறேன். ஏனென்றால் விவாதிக்கப்படுகிறதே பல்கலை கழகம் பற்றி, அது மாதிரி ஒன்றிலிருந்துதான் எட்டு ஆண்டு வகித்த பதவியை இப்போது தான் விட்டு வந்திருக்கிறேன். ஆனாலும், இன்னும் கால்நாள் கூட ஆக வில்லை, ஆதலால் சட்டப்படி துணிந்து பேசலாம் எதானாலும் சரி. என் கருத்துக்களுக்கு, ஒரு எழுத்து முலமான ருஜுமதிப்பு எற்படுகிறதாக, சாகிற ஒருவனின் வார்த்தைகளைப் போல ஒருவித உறைக்கும் தன்மை கூட இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. இங்கிலீஷ் இலக்கியம் கற்பிப்பது தான் அங்கு எனக்கு வேலை. எல்லாம் சேர்த்து, அங்கு குடியாகவே இருக்கும் ஒருவித இலக்கிய விமர்சகனுகவே என்னைப் பற்றி நினைத்துக்கொண்டேன். 'ஆராய்ச்சி' விஷயத்தில் எந்த அக்கறையும் இல்லை எனக்கு. அடுத்த தலைமுறை தொழில் பண்டிதர்களை படிப்பித்துக்காகவே நான் அங்கு இருப்பதாகவும் நினைக்கவில்லை. நான் படைப்பாளியாக இருந்ததினாலே ஒரு விசேஷ முறை கையாளும் பகட்டுக் காரியம் செய்யவும் முயலவில்லை. நாவல்களும் கவிதைகளும் நான் வெளியிட்டிருப்பதுக்கும் இங்கிலீஷ் இலக்கிய ஆசிரியராக என் திறமைக்கும் எந்த விதத்திலும் சம்பந்தமே இல்லை என்று தான் நினைத்தேன். அங்கே நான் ஒரு விமர்சகனாக. எப்படி விமர்சகனுவது என்று கற்பிப்பதுக்காக இருந்தேன் என்றே நினைத்தேன். இருந்தாலும் முடிவில் தான் நான் நினைத்தது தவறு, பல்கலைக்கழகத்தில், உண்மையில் ஒரு விமர்சகனுக்கு இடமே இல்லை என்பதை உணர ஆரம்பித்தேன்.

ஏதோ விளையாட்டுப் புதிராக நான் இதை எழுதவில்லை என்று வாசகர்களுக்கு எச்சரிக்கிறேன். சமீபத்தில் இதன் பக்கங்களில் மிஸ்டர் எ. அல்வாரஸ் 'பல்கலைகழகத்தில் கவி' என்பது பற்றி எழுதி இருந்தார். அயர்லாந்தில் பாம்புகளைப் பற்றி பேசுகிற மாதிரி அவர் அந்த விஷயத்தை கையாண்டிருந்தார். பல்கலை கழங்களில் கவிகளே இல்லை' இருக்கவும் முடியாது எந்த கவியாவது பல்கலை கழகத்தில் வேலைக்குப் போனால் சீக்கிரமே கவிகள் என்ற நிலையை இழந்து விடுவார்கள் என்றார் அவர். பல்கலைக் கழக ஆசிரியர் பதவி ஏற்று, (அநேகர் இருக்கிறார்கள்) சில ஆண்டுகளுக்குப் பின் தங்கள் கற்பனை ஊற்று வறண்டு விட்டதை உணர்ந்த கவிகள் எல்லோருக்கும் இது ஆறுதலாக இருந்திருக்க வேண்டும். மிஸ்டர் அல்வாரஸ் ஆதரவு பலத்தில் அவர்கள் தம் உத்யோகத்தின் மீது பழியை போட்டு விடலாம்; அவர்கள் பொறுப்பும் நீங்கிவிட்டது. அவர்கள் திறமை செத்து விட்டது. ஆனால் தாங்கள் அதை கொன்றுவிட வில்லையே. பிழைப்புக்காக இல்லாது போனால் (இப்போது அவர்கள் பெருமை பேசலாம்) தாங்களும் கவிகளாக அதுவும் தலை சிறந்த கவிகளாக தாங்கள ஆகி இருக்கக்கூடுமே. அமெரிக்காவில் போல ஒரு 'படைப்பு' பற்றி கற்பித்தாலும் சரி, அல்லது இங்கிலாந்தில் போல இலக்கிய சரித்திரம் போதித்தாலும் சரி, அப்படிப்பட்டவர் இனி கவியே எழுத மாட்டார் என்பதை நாம் அறிகிறோம். மிஸ்டர் அல்வாரஸ் எழுதுகிறார், 'எந்தவித மானாலும் சரி அவர் கலைக்கு ஒரு தரகன்; ஒரு படைப்பாளி ஒரு போதும் அப்படி இருக்க முடியாது...' விமர்சகர்கள் பற்றி நான் இந்த நிலை எடுத்துக் கொள்ளப் போவதில்லை; விமர்சனம் ஒரு கலை இல்லை...அது நுண்கலைகளில் ஒன்று 'இல்லை' பயன்கலைகளில் ஒன்று என்று வேண்டுமானால் சொல்லலாம்; நீண்ட பயிற்சிக்கு தன்னை தயார் படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கும் சாமான்ய புத்தி உள்ள யாராலும் இதை செய்யமுடியும். நான் சொல்வது! பலகலை கழகம் விமர்சனத்தை 'கற்றுத்தர' முடியாது. அந்த மாதிரி ஸ்தாபனத்தில் இலக்கியம் பற்றி பேச அமர்த்தப்படும் ஒருவர் அங்கு ஒரு ஆசிரியராக அமர்த்தப்பட்டிருக்கிறாரே தவிர விமர்சகராக இல்லை என்பதுதான்.

இலக்கிய விமர்சனம் என்பது, சமமானவர்களிடையே, இலக்கிய படைப்புகள் சம்பந்தமாக மதிப்பு பற்றிய முடிபுகளை செய்ய ஏதுவாக இருவருக்கும் பொதுவான ஒரு தளத்தை அமைத்துக்கொள்ளும் ஒரு விவாதம்தான் வரையறை விளக்கமாக இது அப்படி ஒன்றும் திருத்தமானது இல்லை. பதங்களை திருத்தி அமைத்தோ இங்கும் அங்கும் மாற்றவோ அதை சரிப்படுத்தி விடலாமே தவிர அதை அப்படியே உதறிவிட முடியாது. இலக்கிய விமர்சனம் என்பது அதுதான். இல்லையானால் வேறெதுவும் இல்லை. அது 'சமமானவர்களிடையே' நடப்பது. ஏனென்றால் எல்லா விமர்சன விவாதங்களின் இயல்பு, பங்கு கொள்வோம் நியாயமாக ஆரம்பிப்பவர்கள் என்பதுதான். நான் படித்து, நீ படித்திராத ஒரு புஸ்தகத்தைப் பற்றி உன்னிடம்நான் விளக்கினால் நான் ரொம்ப ரஸமாகப் பேசலாம்; ஆனால் விமர்சனத்தின் விளிம்பைக்கூட நான் தொடமுடியாது அல்லது தொட்டாலும் என் விளக்கத்தின் ஒரு பகுதி தன்னயப் பிரஸ்தாபமானதாகவே இருக்கும். நோக்கம், முடிவில் மதிப்பு பற்றிய முடிபும் தரம்பற்றி புரோகித ஆதிபத்யப் போக்கானதை ஏற்படுத்துவதாக இருக்கும், இந்த புத்தகம் அந்த புத்தகத்தைவிட மேலானது, இன்ன காரணத்தால் என்று ஏறக்குறைய நாம் சொல்லலாம். அவ்வளவுதான். ஒவ்வொன்றுமே தனிப்பட்டவரது 'ருசி' விஷயம் என்பது இல்லை. எனக்கு ஹாம்லெட் பிடிக்கும் உனக்கு அ:கதா' கிரிஸ்டி என்று ஒப்புக் கொண்டோமானால் அந்த விஷயம் பற்றி கடைசி முக்

சிய கருத்தை நாம் சொன்னவர்களாக ஆகமாட்டோம். இலக்கிய தீர்ப்புகளை நிரூபிக்க முடியாது. ஆனால் அவைகளை விவாதிக்க முடியும் ஒரு அளவு ஆதாரங்களையும் நாம் கொண்டு காட்டலாம். குறியில்லாமல் ஏதோ நேர்ந்தபடியான ஒரு உத்வேகத்தில் மட்டும் ஏற்படுவதலால் பகுத்துணர்தல் ஜார்ஜ் ஆர்வல் சொன்னார். நியமப்படி, அழகியல் மனச்சாய்வு, ஒன்று தெரிவிக்க முடியாத இருக்கவேண்டும். அல்லது இலக்கிய விமர்சனம் முழுவதும் ஒரு ஹம்பக் அமைப்பு முறையோ என்று ஒருவன் திகைக்கு படியாக அழகியல் தன்மை இல்லாத நோக்குகளால் அவ்வளவு பழுதானதாகி இருக்கவேண்டும். ஆர்வல் சொன்ன ஒரு சில குழந்தைத்தனமானவைகளில் இது ஒன்று ஆனாலும். அது இவ்வளவு தெளிவாக தூக்கித் தெரிவதுக்கு காரணம், கபடமின்றி அப்பட்டமான மொழியில், மழுப்பல் இல்லாமல் அது சொல்லப்பட்டிருப்பதால்தான். ஒருவரது 'அழகியல் மனச்சாய்வு'களை சொல்லி தாங்கிப் பேசுவது தான் இலக்கிய விமர்சனத்தின் வேலை என்று அவர் நினைக்கிறார் என்பதை கவனிக்கவும். ஆனாலோ ஒரு இலக்கிய படைப்பினால் ஏற்படும் அதைப்பு முழு மனிதனையுமே உட்படுத்துகிற ஒன்று. அழகியல் அம்சம் அதில் ஒரு பகுதிதான். அழகியல் மனச்சாய்வுகள முழு மனிதனின், மற்ற அம்சங்களிலும் சுவாரஸ்யமாக சிக்கி இருக்கின்றன. ஆனால் இந்த உட்படுத்தலால் அவை பழுதாகிவிட்டன என்று சொல்வதாக ஆகாது இது. ஆர்வலின் கருத்தை சந்தர்ப்பத்துக்கு பயன் படுத்திக் கொள்வது லகுவானது ஆனால் நான் குறிப்பது இது தான், பண்டிதர்கள் (அகாடமிக்ஸ்) எழுதும் இலக்கியம் பற்றிய ஃபாஷனானதும் செல்வாக்குள்ளதுமான எழுத்துக்கள் இதுபோன்ற தாதுமாறுகளை அடிப்படையாகக் கொண்டே இருக்கின்றன. எந்த பண்டித விமர்சகர்களை வெளி உலகத்துக்கு தெரிய வந்திருக்கிறது என்று, நீங்கள் பார்க்க முயன்று பிறகு போய் அவர்கள் நூல்களை பார்த்தீர்களானால் எல்லாம் விமர்சன விரோதமான ஒரு பாசாங்கு அலங்காரமான மரபுக்கு சொந்தமாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள். பல்கலை கழகத்துக்கு வெளியே தெரியவராத அவர்களது கூட்டாளிகளோ – ஆனாலும் இன்னும் செல்வாக்குள்ளவர்கள் இலக்கியம் பற்றி மெய்ம்மைத்தகவல்களை குறிப்பதில் பொதுவாக ஈடுபட்டிருப்பார்கள். இதெல்லாம் நேர்மையானதுதான் ஆனால் இலக்கிய விமர்சனத்துக்கும் இதுக்கும் ஒருவிதசம்பந்தமும் இல்லை உண்மையில். இலக்கியத்தைப்பற்றி எழுதுபவர்களில் எத்தனை பேர் அதுவும் விமர்சகரகள்' என்று வழக்கமாகவும் அடிக்கடியும் கருதப்படுபவர்கள், நான் மேலே குறிப்பிட்ட விதமாக விமர்சனம் தங்கள் வாழ்க்கையில் செய்திருக்கிறார்கள் என்று சிந்தித்துப் பார்க்கிறபோது துக்கப்படுத்துவதாக இருக்கிறது. அவர்கள் தகவல்களை வெளியிட்டு இருக்கிறார்கள். தங்கள் வாசகர்களுக்கோ அல்லது கேட்பவர்களுக்கோ இந்த புஸ்தகம் அந்த புஸ்தகம் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அவர்கள் மட்டுமே படித்திருக்கிற புத்தகங்களின் பொருள் அடக்கங்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் பாரபட்சமற்ற சமத்வமான விவாதத்துக்கு—அதைத்தான்' விமர்சனம்' எனலாம், அதுக்கு அவர்களுக்கு வயிறு கிடையாது.

எதானாலும், நாம் அதிகம் எதிர்பார்க்கவே கூடாது. பல்கலை கழகங்கள் கல்விகற்பிக்கும் ஸ்தாபனங்கள், படித்தவர்களோ நாம் திடுக்கிடும்படியாக அநேக சமயம் பகுத்துணர்தல்சம்பந்தமாக அலட்சியமாக இருந்து விடுகிறார்கள். இதரகுணங்கள் அவர்களுக்கு உண்டு - தாங்கள் எடுத்துக் கொண்டவிஷயத்தில் உற்சாகம், பல ஆண்டுகளை படிப்பிலேயே கழிக்க சாத்தியமாக்கும் உடல் தெம்பு, விவரணங்களை சேகரிப்பதில்பசி, அலுப்புகத்தரக்கூடியவேலைகளில் கூட தாங்கள் அலுப்படையாமல் ஈடுபடுவதுக்கான ஒரு மெச்சத்தக்க விசேஷதிறமை இதெல்லாம். ஆனால் ஒரு விமர்சகனுக்கு உரிய அவசியமான குணங்கள அல்ல :பெண்ட்லீ முதல் இன்று வரை கலாநிபுணர் விமர்சகர்களாக சாதித்திருப்பது சிறப்பானது இல்லை செத்த குதிரையை சவுக்கால் அடிக்க வேண்டாம் நாம். ஆனால் நான் நம்புகிறேன், 'இருபதாம் நூற்றாண்டு தன்கால கவிதைக்கு அகாடெமிக் எதிர்ப்பு' பற்றி யாராவது 'தீஸிஸ்' (நிச்சயமாய் எழுதுவார்கள்) எழுதும் போது சில திடுக்கிடவைக்கும் தகவல்களை எடுத்து சொல்லக் கூடும். கலாசாலைக்கு உரியவர்கள் தங்கள் ருசிகளில் மாறு பாட்டுக்கு இடம் கொடாத பழங்கிடைப்பற்றுக்காரர்களாக இருப்பது ஒருவேளை சரியாகவும் இருக்கலாம் மரபுக்கு காவலர்களான பணியை அவர்களுக்கு சமுகம் இட்டிருக்கிறது; தொடர்ந்த இலக்கிய சீலத்தன்மையின் நேர்மைபற்றி அவர்கள் அதிகப்படியாக அழுத்திச் சொல்லவேண்டியது இயல்பு தானே. ஆனால் அதுக்காக அநேகமாக உடனிகழ்கால ஒவ்வொரு பெரிய கவி மீதும் அவர்கள், காறித்துப்பும் பழக்கத்துக்கு அது சமாதானமாகாது, இது. குறிப்பாக எப்போதும் ஒளிந்து இருந்து சுடுகிறதாகவே இருந்து வருகிறது. தற்கால கவிதை பற்றி பெரும்பாலான தாக்குபுத்தக பக்கங்களின் அடியில் உள்ள குறிப்புகளில் இகழ்ச்சி மூலமாக இருக்கும் ஒரு வருத்தமான உதாரணம் வருத்தமானது ஏன்என்றால் நல்ல படித்த ஒரு' வரது கவுரவக்குறைவு காரணமான எதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள பிடிக்காத விஷயம்) நல்ல மொழிபெயர்ப்பு நூலும். உணர்வோடு ஆக்கப்பட்டதுமான :காபின் :போன் தயாரித்த 'ஆங்லோ-ஸாக்ஸன் கவிதை' நூல். மொழி பெயர்ப்பு பற்றிய போட்டிக் கோட்பாடுகள் பற்றி :போன் எழுதுகையில் 'மிஸ்டர் டி. எஸ். இலியட் என்கிற அமெரிக்க விமர்சகர்' என்று குறிப்பிடுகிறார். இந்த மாதிரி செய்கிறது சின்னப் புத்தியுள்ள அதிகப் பிரசங்கித்தனம் அவமதிப்பு இதில் இருக்கிறது. (1)இலியட்டை ஏதோ அடையாளம் காட்டித்தான் குறிப்பிட வேண்டும் என்று சம்பாவித்துக் கொள்வது. (2) விமர்சகர் என்று சுட்டிச் சொல்வது ஏதோ பாதி மறக்கப்பட்ட ஒரு கட்டுரைக்கு ஆசிரியர் அவர், அதுக்கு மேல் எதுவும் இல்லை என்பதுபோல (3) அமெரிக்கர் என்று சுட்டுவது இந்த இடத்தில் கிண்டல்-அதாவது தன்னையும் ஜில்பாட் மர்ரேயையும் புரிந்துகொள்ள இயலாத ஒரு வியாபாரப்பார்வை நாகரீகத்தைச் சேர்ந்த ஒரு அன்னியர் என்று அதுக்கு அர்த்தம். .போனுக்குத் தெரியும் இதுக்குள், மிஸ்டர் இலியட் இருபது ஆண்டாக ஒரு பெரிய கவியாக ஏற்கப்பட்டவர், அதுவும் பல வருஷங்களுக்கு முன்பே பிரிட்டிஷ் பிரஜையாகவும் ஆகிவிட்டவர் என்பது. ஆனாலும் இந்த மாதிரி விஷயங்களை எதிரொலிக்க கற்றுக்கொண்டவர். முடிவில், விமர்சனப் பாங்கு இல்லாத கண்டனம் போலவே விமர்சனப் பாங்கு இல்லாத ஒப்புதலிலும் வந்து முடிகிறது. சாதாரண கலாசாலை பண்டிதர் (:டான்) எல்லா இன்றய கவி

தைகளும் இப்படித்தான் ஒரே தினுசு என்று இலியட்டை இகழ்ந்து விட்டு முழுக்க உபயோகமற்றதுக்கு பேர்பெற்றவைகளை ஏற்று அவைகளை சுமந்து வருபவர்களை வரவேற்று செல்வாக்கானதாக ஆக்கும் நிலைக்கு போய்விடுகிறான். இதையெல்லாம் எழுத எனக்கு மனவேதனையாகத்தான் இருக்கிறது. கலாசாலை பண்டிதர்களை எனக்கு பிடிக்கும். அவர்களில் சில என் நெருங்கிய நண்பர்கள். யூதர்கள் மாதிரி ஆனால் அவர்கள் என் காலத்தில் 'தொடர்ந்த இலக்கிய சீலத் தன்மை' என்பதுக்கு நான் கொண்டிருக்கிற அர்த்தத்தில் அவர்கள் ரக்ஷகர்களாக இருக்கவே இல்லை என்பதை நான் சொல்லியாகவேண்டும்.

பல்கலை கழகத்தின் ஜீவாதாரமான அக்கறைகளில் ஒன்று இல்லை இலக்கிய விஷயங்கள். 'அகாடமிக் பருவநிலை'க்கு அப்பாலேயே இலக்கிய விமர்சனம் இருக்க முடியும். இருந்தாலும் அது ஆரோக்யமாக இருக்கவும் முடியும் என்று சொல்லக்கூடும். நான் அப்படி நினைக்கவில்லை. எந்த ஒரு சமயத்திலும் இலக்கியம் படிக்கும் மாணவர்களில் பெரும்பகுதியினர் இருக்கிறார்கள், இவர்கள் தான் வெளியே போய் 'வாசக பொது மக்கள்' ஆகி, தங்களுக்குத் தகுதியான இலக்கியத்தை பெறுபவர்கள். இந்த நோக்கிலிருந்து பார்க்கிறபோது, சென்ற முப்பது ஆண்டுகளில் இலக்கிய உறவு கொண்ட ஆசிரியர்கள் பலபேரும் தாங்களும் தங்கள் மாணவர்களும் வாழும் உலகத்தில் ஆக்கப்பட்ட சிறந்த படைப்புகளுடன் எந்தவித இணக்கமும் ஏற்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டார்கள் என்றே பயமாக இருக்கிறது. நாற்பது ஆண்டுகாலமாக 'கணப்பண்டை' இலக்கியக் குழுக்கள் கூட்டத்தில் செல்வாக்குள்ளவராக இருந்த ஒரு பிரபல வயதான பேராசிரியர் சொன்னார், தான் அமெரிக்கா சென்றிருந்த போது, டி. எஸ். இலியட்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டார்களாம் அமெரிக்க மாணவர்கள். இவர் அவர்களிடம் (விஷமமாக பார்த்துக்கொண்டே) நான் அதைப்பற்றி நினைக்கிறதே இல்லையே, என்றாராம். ஒரு திகைப்பூட்டும் கதையாக இது சொல்லப்பட்டது. சமீபத்து மோகங்களினால் பாதிக்கப்படாத எவ்வளவு திடமான சுயேச்சை மனம் படைத்த கிழவர் அவர் என்று நீங்கள் நினைப்பீர்கள் அல்லவா? ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அந்த அமெரிக்க மாணவர்களுக்கு ஃடிரைஃடனை தான் புரிந்து கொள்வதாக கூறி, பேட்ஸ்ஸையோ' ஹாப்கின்ஸ்ஸையோ பற்றி எதுவும் பேசாத பண்டிதர் 'ஃடிரைஃடனையும் புரிந்து கொள்ளவில்லை என்பது தான்' என்று அலன் டேட் குறிப்பிட்டிருப்பது தெரிந்திருக்கும். 1660 காலத்து ருசிபற்றி 1860 காலத்து ருசியைக்கொண்டு ஒருவர் வியாக்யானம் செய்வாரானால் அவர் ரொம்ப சுவாரஸ்யமாக பேசக்கூடும், ஆனால் பலன் பொது வாசகர்களுக்கு உவப்பாக இருக்காது. சென்ற கால இலக்கியத்தை முதல் தடவையாக படிக்கும் மாணவர்களுக்கு தாங்கள் வாழும் காலத்து—தங்கள் தாத்தா வாழ்ந்த காலத்தவை இல்லை—அர்த்தத்தில் விளக்கக்கூடியவர்கள் தான் தேவை. இது பருவம் பற்றிய கேள்வியும் இல்லை. பிரச்னை எல்லா வயதானவர்களையும் விரட்டிவிட்டு நாற்பதுக்கு உட்பட்டவர்களையே ஆசிரியத் தொழிலில் அமர்த்துவது என்பது இல்லை. பல்கலை கழக வட்டாரங்களில் பழகியவர்களுக்குத் தெரியும், உங்கள் 'ஃடான்'கள் (ஒருவர் சொன்னபடி) தன் தாய் மணந்த காலத்தோடு கலை போச்சு என்ற திடமான நம்பிக்கையோடேயே அதிகம் பிறந்தவர்கள் என்பது.

அதிகம் முணுமுணுப்பதில் பயன் இல்லை; இதை வைத்துக்கொண்டு தான் நாம் காரியம் நடத்தவேண்டி இருக்கிறது. ஃடான்களேதான் ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுப்பதால் அவர்கள் மாறுதல் ஏதும் ஏற்படாமல்இருக்கப்பார்த்துக்கொள்வது இயல்புதானே. (பல்கலை கழக சீர்திருத்தம் பற்றி பேராசிரியர்களது கருத்துக்களை கேட்பது கட்டாயப் படைத் தொழில் தளபதிகளிடமே அபிப்ராயம் கேட்பது போல. தனக்கு வேலை இல்லாது போகும்படி அவ்வளவு தாராளமாக ஒருவர் பேசக்கூடும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஒரே முடிவு, நான் நினைக்கிறேன். நமது இலக்கியப் பள்ளிகளிலிருந்து ரொம்பவும் எதிர்பார்க்கக்கூடாது என்பதுதான். உதாரணமாக, இந்த இங்கிலீஷ் மொழி விற்பன்னர்கள் இங்கிலீஷ் இலக்கிய விமர்சகர்களை உருவாக்குவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது. அதிகம்போனால் காலப் போக்கில் விமர்சனத் திறமை காட்டக்கூடியவர்களை வேண்டுமானால் தயாரிக்கக்கூடும். நாம் அடையக்கூடிய எதையாவது இலக்குவைப்பதுதான் மேல். அத்யாவசியமான சமூக சரித்திரத்துக்கு ஊற்றுக்கண்ணாக இங்கிலீஷ் இலக்கியத்தை போதிப்பது (இன்ன-இன்ன-காலத்தில் இப்படி—இப்படி வாழ்ந்தது) ஆரம்பமொழி சரித்திரம்பற்றி கொஞ்சம் பக்குவப்படுத்துவது, இந்த மாதிரி அப்போது தாங்கள் படிக்கும் நூலை தாங்களே விளக்கிக் கொள்ளமுடியும். அவர்களுக்கு இந்த நிலையில் விமர்சனத்தை கற்றுத்தர முடியும் என்று நான் நினைக்கவில்லை. விவாதிக்கப்படும் நூல்களுடனும், வாழ்க்கை இயல்பு பற்றியும் மாணவனுக்கு தக்க சமமான பரிச்சயம் இருப்பதைப் பொருத்து இருக்கிறது இது. ஆனால் தக்க பரிச்சயம் இருந்திருந்தால் அவர்கள் அங்கே வந்திருக்கமாட்டார்களே. உங்களைவிட எதுவும் தெரியாத ஒருவர் செய்யும் சொற்பொழிவுகளுக்கு நீங்கள் போகிறதில்லையே. தன் மாணவர்களைவிட அதிகம் அவருக்கு அதிகம் தெரியும் என்பதால்தானே பல்கலை கழக ஆசிரியர் அங்கே இருக்கிறார் அடுத்தபடி அவர் விமர்சகர் ஏனென்றால் அவர்களைவிட அவர் பகுத்துணர முடியும். ஆனால், எதானாலும் அவர்களுக்கு இந்த பகுத்துணர்தலை அவர் போதிக்க முடியாது.

ஆக்ஸ்ஃபோர்ஃடுக்கும் கேம்ஃபிரிட்ஜ்க்கும் வித்யாசம் இங்குதான். ஆக்ஸ்ஃபோர்ஃட் மாணவனாக நான் இருந்தபோது குணம் கண்டு பாராட்டல்தான் போதிக்கப்பட்டேன். ஏராளமான நூலாசிரியர்களை படித்தேன். அடுத்தடுத்து வேகமாக. ஒவ்வொருவர் பற்றியும் சிறப்பித்துச் சொல்லத்தக்கதையே பொருக்க கற்றுக்கொண்டேன். கேம்ஃபிரிஃட்ஜ் மாணவர்களுக்கு போதிப்பது போல, படிக்கத் தகுதியானதாக கருதுமுன், ஒவ்வொரு ஆசிரியரையும் வடிகட்டிப் பார்ப்பது என்பதை யாரும் எனக்கு போதிக்கவே இல்லை. ஒரு வகை இங்கிலீஷ் பேச்சு மொழிக்கும் மற்றொன்றுக்கும் உள்ள வித்யாசத்தை அறிவதில் ஆக்ஸ்ஃபோர்ஃட் நேரம்கழிக்கையில், கேம்ஃபிரிட்ஜ் இந்த வடிகட்டியை தயாரிப்பதில் நேரம் கழிக்கிறது. இது—அந்த கட்டத்தில், அதுவும் அந்த பக்குவ நிலையில், சொல்கிறதை திருப்பிச் சொல்ல கற்

(40-ஆம் பக்கம் பார்க்க)

எழுத்து கவியரங்கம்

அறிமுக வார்த்தை

இப்போது கவியரங்கங்களுக்கு ரொம்பவும் மவுசு. மகாநாடு, விழா எதானாலும் சரி, பொங்கல், தீபாவளி, புத்தாண்டு என்றாலும் சரி; ரேடியோவிலும் அதேபோல. பத்திரிகைகளும் விலக்கில்லே. ஒரு பொருளைக் கொடுத்து, கவிகளுக்கு அழைப்பு அல்லது தாக்கீது. அதைப்பற்றி கவிதை இயற்ற. இந்த கவியரங்கம் அந்தமாதிரி ஒன்று இல்லை. புதுக்குரல்காரர்கள் அதுமாதிரியான ஆக்கினைக்கு உட்படாதவர்கள். 'மேட்டு ஆர்டர்' தயாரிப்புக்கு இந்த புரட்சிக்காரர்களிடம் நெருங்க முடியாது. ஊளுத்துப்போன உள்ளடக்கம், சலித்துப்போன சந்த ஓசை, மரத்துப்போன எதுகை, மோனை, வெளுத்துப்போன உவமை இவைகளுக்கு எல்லாம் மீறி எழுந்து வளமான கற்பனையும் சத்தான இன்றைக்கானதும் என்றைக்குமானதுமான பேருண்மை அம்சங்களையும் கொண்டவை. இனி நீங்கள் கவியரங்கத்துக்குள் நுழையலாம்—

பறக்கும் சாத்திரத்தை படித்தறியா சைபீரியா 'காட்டுவாத்து' ஆகி சிறகை விரி, வாழ்வும் வேடந்தாங்கல் ஆகும் என்ற கவி நாமும் 'கொக்கு', செயலும் கலை, வாழ்வும் குளம் என்கிறார்.

— ந. பிச்சமூர்த்தி

கொக்கு

படிகக் குளத்தோரம்
கொக்கு.
செங்கால் நெடுக்கு,
வெண்பட்டுடம்புக்
குறுக்கு,
முடியில் நீரை நோக்கும்
மஞ்சள் கட்டாரி மூக்கு.
உண்டுண்டு
அழகுக் கண்காட்சிக்குக்
கட்டாயக் கட்டணம்—
சிலவேளை மீனும்
பலவேளை நிழலும்...
வாழ்வும் குளம்
செயலும் கலை
நாமும் கொக்கு
சில வேளை மீனழகும்
பல வேளை நிழலழகா?
எதுவாயி னென்ன?
தவறாது குளப்பரப்பில்
நம்மழகு—
தெரிவதே போதாதா?

துருப்பிடித்த இதயத்தை துடைக்கவந்த நேரத்தில் துருவேற்றுவோர் எத்தனை என்று வருந்தி இன்று தன்னைச் சுற்றியுள்ள சூழ்நிலையை 'நரகம்' என்று உணரும் மனிதனை காட்டிய கவி எப்போது எப்படி, என்ன 'பாவம்' செய்தேன் என்று தன்னைச் சூழ்ந்துள்ள இன்றய சூழ்நிலையில் வருந்தும் ஆண்டவனை காட்டுகிறார்.

—சி. மணி

பாவம்

மண்டையைப் பிளக்கும்
நரம்பில் ஊருகின்ற செந்நீரை
கொதிக்க வைக்கும் சதைக்குள்
குளித்து முத்தெடுக்கும்
உள்ள பித்தம் ஏற்றும் வெயிலோன்
மூலை முடுக்கெல்லாம் தேடி நிரம்ப

ஈரப்பசையுள்ள சாக்கடை பட்டவுடன்
சொக்கி
வாயில் நீரூறக் குதித்து
குளுமைக்குத் தலையை முட்டி
உடலை வளைத்து நீட்டிப் புரண்டு புரண்டு
சுடுமண் ஒட்டிய உடலோடு எழுந்து
பறக்கக் கொடுத்து வைக்க வில்லையே
நொந்து எடுத்த காலைத் திரும்ப
தரையில் வைக்க மனமின்றி வேறு
வழியின்றி நாலுகாலில் நொண்டி
வேக நடைபோடும் அநாதை
நாய் ஒன்று

புழுதியுடைய கலைந்த
மயிரென்னும் குடையுடைய
வேர்த்த முத்து மண்ணுடைய
கறுத்த முகமுடைய பருவம்
ஏதுமில்லா பகலுடைய
சிறுவர்
குனிந்தோடிக் கல்லெடுத்து
களித்துக் குறிபார்த்து
கடவுளே தவறாத
இட்டதால் கால் உடைய
உடல் துடிதுடிக்க வாய்
பிளந்து நாக்குநீள நீர்
தளும்பி நிறைந்து சொட்ட
பிழைத்தது போதுமென்று
அடுத்து கல்லுக்கு நடுங்கி
விரைந்தோடச் செய்வோர் உண்டு

கிடைக்காத நாய்க்கு மிக ஏங்கி
கிடைத்ததுபோது மென்று தாவிப்
பிடித்துத் தொட்டுத்தடவி நெறுக்கி
ஆசைக் கைகளால்—
இப்பிஞ்சுக்கைகளுக்கு ஏது
இத்தனை சக்தி?—
வதைத்து வாலை நீட்டி நீட்டி
சலித்துக் காதைத்தேடிக் கலக்கி
புதுமை வறண்டுபோக முதுகைப்
பதம் பார்த்துத் துரத்துவோர் உண்டு

ஆசையோ கவலையோ மகிழ்வோ
நெஞ்சடைத்து கண்மறைக்க
தொல்லை தர மறப்போரும் உண்டு
குறைக்கின்ற காலம் ஆசை
வட்டத்தைக் குறுக்கிக் குறுக்கி
பால் பணம் புகழோடு நிறுத்த
வயது வந்தோர்

பார்த்ததும் முகஞ்சுளித்து
முறைத்து முளித்துக் கைநீட்டி
முக்கிக் குலைத்து விரட்டுவோர் உண்டு
எழுத்திலும் பேச்சிலும் அதை
நன்றிக்கு உவமை சொல்லி
பரணி பலப் பாடுவோர் உண்டு
வெறுப்பைக்காட்ட நாயென்று
சொல்லித்திட்டி நடுத்தெருவில்
அதை நிறுத்துவோர் உண்டு
நாயினும் கீழென்று
மனிதனைக் குறைத்து அதற்கு
மேற் பதவி தருவோர் உண்டு

நாய் குறுக்கிட்டது
அத்தனையும் அடைந்தது
நான் குறுக்கிட்டேனா?
யார் கண்ணிலாவது பட்டேனா?
எங்கே விரலை விடு
பிறகு ஏன் இத்தனைபாடு
நாய் படாத பாடு?
கண்ணில் பட்டால்தானே
பாம்பையும் அடிக்கிறாய்
கண்டதால் தானே
தேடிப்பிடித்து ஆட்டுகிறாய்
எப்போது எப்போது சொல்
எப்போது நான் வெளியில் வந்தேன்
உன் கடன்காரக் கண்ணில் பட்டேன்
காணாமலே
ஏன் என்னைத் தேடிப் பிடித்து
ஆட்டிப் பார்க்க அலைகிறாய்?

சாகத் தெரிந்திருந்தாலும்
செத்தாவது தொலைந்திருப்பேன்
எப்போதோ
அதற்கும் எதற்கும்
வழியில்லை

நானே நானே மாட்டிக்கொண்டேன்
நீயாவது ஒருவழி சொல்லி
அருளேன்
நாயைக் கண்டாலும் தன்வழியே
செல்ல அருள்புரிவோர் உண்டு
நான் அதனிலும் தாழ்ந்தவனா?
பலநாள் மறந்தாலும் ஒருநாள்
என்னைப் புகழ்கிறாய் மறுநாள்
உனக்குப் பல ஐயங்கள்
எனக்குக் கண்ணில்லையா காதில்லையா
அது இல்லையா இது இல்லையா
எனக் கேள்வி தொடுக்கிறாய்
என்னை எப்போதும்
தனியாக விடமாட்டாயா?
உன் மனதைப் போல பலமடங்கு
விரிந்த இவ்வண்டத்தில்
ஏதோ ஒரு மூலையில் சிவனேயென்று
அடங்கி ஒடுங்கி
முடங்கிக் கிடக்கிறேன்
தப்பித்தவறி உன்கண்ணில்
பட்டுவிடக் கூடாதே என்று
பயந்து கிடக்கிறேன்
அப்படி நான் இருந்தும்
என்னை விடமாட்டேன் என்கிறாய்
நான் ஒரு கேள்வி கேட்கிறேன்
அருள் புரிந்து பதில் சொல்வாயா?

எப்போது எப்படி என்ன
பாவம்
நான் செய்தேன்?

இருட்டு குகை ஒன்றில் இலக்கியப் பொருளில் சோதனை நடத்தி தட்டித்தடவி சிந்தனைக் கையில் வந்ததை எடுத்து வெளியில் வீசி இருளில் குமைந்த பொருளை ஒளியில் கண்டு திகைத்து 'கவிவேதனை' படும் கவிஞனை காட்டிய கவி, சேமநிதி போல் வளரும் சப்பாத்திப் புதர் 'பாரதி பரம்பரை' கவிகளை (?) காட்டுகிறார்.

—தி. சோ. வேணுகோபாலன்

பாரதி பரம்பரை

வித்து விஷயத்தை விருட்சக் காடாக்கும்
சித்து விளையாட்டுத்தான்!

ஆனாலும்,
சொத்தை மினுக்கொளியை ஜோதிப் பிழம்பென்பார்
மத்தியிலே வாழும்
மாயத்தால்
முட்டித் திசைச்சரிவில் முக்கித் தடுமாறி
சுட்டும் வழிவிலகிச்
சர்ப்பம்போல்
எட்டுத் திசைகளிலும் ஏறிக்குறும்பாலே
கொட்டம் அடிப்பதுவே
கற்பனைகாண்!

கண்டாச்சா? பின்னுடன்வா! கவித்தொழிலின் ரகசியத்தை
விண்டுரைக்கப் போகின்றேன்!
விழிக்காதே!
மானும் மிருகவகை, மற்றுமுள பட்சிகளும்
வானத்துச் சந்திரனும் வாய்த்த உடுக்கூட்டமதும்
தேனும் தென்றலதும் தீராத புத்தமுதும்
மீனும் மலர்க்காவும் மாளாது பட்டியலே!

ஒப்பனைக்குச் சாமான் ஒருகோடி உண்டிதுபோல்;
செப்புதற்கு நேரமில்லை! ஜெரித்துக்கொள்.
அப்புறம்கேள்.
மந்தைவெளி, தந்தகிளி, கந்தலுடை, சிந்துநடை(?)
இந்தவிதம் மோனை எதுகைப் புதுமைக்கு
எடுத்துக்கொள் அகராதி!
அடுத்தது கேள்.

பண்டைக் கவிநயங்கள் பண்ணிவைத்த சித்திரத்தின்
ஜீவத் துடிப்பகற்றிச் சொல்மாற்றிச் சந்தத்தை
சிதைத்துச் சிலம்பாடி
"உள்ளத் தெழுந்ததடா ஊறுங் கவிக்கிணறு;
வெள்ளத் திமிர்போலே வெடித்துச் சிதறுதடா!"
என்றெல்லாம்
ஏட்டைக் கறுப்பாக்கிக் கிறுக்கியதே எழில்கவிதை !
....
நாட்டில் பண்டிகைகள் நாலாயிரத்துக்கும்
அச்சேறும் பத்திரிகை அத்தனைக்கும் ஆண்டுதோறும்
செத்தாலும் தொடர்ந்துவரச் சேமநிதிபோல் வளரும்
சப்பாத்திப் புதர் !

மௌனத்தில் ஞானம் பேசி முறுவல் பூத்து கற்பின் வைரப்படை தாங்கி நிற்கும் 'கொல்லிப்பாவை'யை காட்டிய கவி 'உயிர்குடிக்க இதழ் துடிக்கும் பாவையாக வாரி அணைக்கவந்த மாரணமாய் நெடிது நிற்கும் இன்னொரு 'கொல்லிப்பாவை'யை காட்டுகிறார்.

—டி. கே. துரைஸ்வாமி

கொல்லிப்பாவை-2

அகலிகை நகைக்க
அருந்ததியும் நின்றிகழ
வருமீரசை ஒருசொல்
நின் நாமம் செப்ப;

வில்லெடுத்து நாண்வளைத்துக்
குறிவீழ்த்தும் முன் கருத்துந்த
கண்ணூடு கண்வளைத்து
உள்ளம்புணர்ந்து உடல் தழுவத் துடித்து
அன்று நின்ற அச்சீதையும்
நின் செயல் கண்டு நெடிது நிற்பாள்.

நின் நாமம் கேட்டு
மாரனும் கை சோர்வான்;
அவன் உயிரனைய ரதியவளும்
நின்றதசியிப்பாள்;

வில்லெனவுடலும் வளைய,
"விண்"ணென்று நாணையொத்து உள்ளமும்
தெறித்து நிற்க
கண்ணெடுத்து உள்ளம் வளைத்துக்
குறிவீழ்த்த முயலாது நிற்கும் நின் செயல் கண்டு
விண்ணவரு மெட்டிநின்று
எள்ளி நகைப்பர்.

மெய்யி னிருளகல
உயிரின் கனவலர
விண்ணவர் கோனும்
சேவலெனக் கூவியழைக்க(க்)
காவல் நீத்துக் கடிதுசென்று
ஒருகணம் அமுதம்பருகி
மறு கணம் கல்லென உருவெடுத்த
அகலிகையும் தீதிலள் என்று
கூறியவனும் அறம்வகுத்த அண்ணலே காண்.

ஆனால்
ஆசையகற்றி
வெறுங்கல்லென வறிதுநிற்கும்
நின் செயல் புரிவதுமில்லை.

நீதான்
கல்லிலடித்த சிலையாக
கனவில் வடித்த ஓவியமாக
சதையும் குருதியும சமைத்துயிர்த்த
உயிர் குடிக்க இதழ் துடிக்கும் பாவையாக
வாரி அணைக்க வந்த மாரணமாய்
நெடிது நின்றாய்;

ஆனாலும்,

அலையாது குலையாது
அலைதள்ளும் நின் குலவும்
வடிவழகு கண்டு
அல்குதலே அதன் வாழ்வெனக் கண்டு, அதனை(ப்)
புல்குதலே வாழ்வென வேண்டி
"சில்"லென்று நின்றேன் நின்முன்.

எனக்கு ஏன் இந்த அவல நிழல், இதுநானே இல்லை, எனக்கு இந்த நிழலே இல்லை, என்றென்றே நெஞ்சுக்குள் ஓலமிட்டு நிற்காமல் ஓடித்தான் பயனென்ன என்ற 'ஞானக்கருமை'க்காரனை காட்டிய கவி, மனதை திறக்க யாருக்கு எதை கொடுப்பேன் என்கிற 'மனக்கூச்சல்' காரனை காட்டுகிறார்.

—எஸ். வைத்தீஸ்வரன்

மனக்கூச்சல்

இருட்டுக்குப் பின்பாட
எலிக்கூச்சல் எம்பிவர,
குருட்டுக்கண்...மலர்த்தினால்
கோபம்தான் புதுங்கியது.

பார்வைக்கு நெருடாத
பச்சைக் கொடுங்கோலம்...
கைகளுக்குள் முட்டாத
கதவுத் தாழ்ப்பாள்......

சாவி எங்கே? சந்திரன் எங்கே?
ஆத்திரம் கனக்க தொண்டை வீக்கம்.

பல்பு எரிந்தால்
எலியன் துணியுமா?
நிலவு தெரிந்தால்
இருட்டு கத்துமா?

பல்பும் 'ப்யூஸ்
நிலவும் 'ப்யூஸ்
உள்ளும் புறமும்
இருட்டின் பூட்டு.

மனசைத் திறக்கவோ !
மனமில்லை.. படபடப்பு...
புத்தியைச் சொடுக்கினுல்
புகலொன்று படுமென்று...

பாலைக் கொட்டினேன்
பூனை கிடைத்தது......
பூனையைப் போற்றினேன்
எலியைக் கொல்ல......

நிலவைப் பிடிக்க
அல்லிக்குத் தேன்கொடுத்தால்
மனதைத் திறக்க
யாருக்குக் கொடுப்பேன்?
எதை??........

எண்ணுகின்ற எண்ணமும் அதை சொல்லுகின்ற சொல்லும் எப்போதுமே ஒன்றுதானு, இல்லை சொல் ஒன்றும் எண்ணம் இன்னென்றும் செயல் மற்றும் ஒன்ருய்... என்றெல்லாம் 'அந்தி மந்தாரம்' வேளையில் மயங்கிய ஒரு மனதை காட்டிய கவி என்ரே, என்னுலே, என் பயத்தாலே முடிவு காண்பேன் என்று எதுவும் புரியாத ஏகாந்த வேளையிலே வீதியின் முனையைவிட்டு 'நடுச்சந்தி'யில் நிற்பவனை காட்டுகிருர்.

—க. ச. ராமமூர்த்தி

நடுச்சந்தி

வீதியின் முனையில் நின்று
வருவோரை, போவோரைப்
பார்த்தே
என் காலத்தை ஓட்டி விட்டேன்.
காலை முதல் மாலை வரை
காரியம் ஏதுமின்றி
மணிக் கணக்காய்
எதை ஏன் எப்படிப் பார்க்கின்ருேம்
என்றெல்லாம்
எண்ணம் ஏதுமின்றி
வீதியின் முனையில் நின்று
வருவோரை, போவோரைப்
பார்த்தே
என் காலத்தைக் கடத்தி விட்டேன்.

வருவோரும் போவோரும்
விதவிதமாய் இருந்தாலும்
நடையிலும் உடையிலும்
மாற்றங்கள் தெரிந்தாலும்
ஒரு ஜாதிக் குரங்கேபோல்
ஒன்றையே குறிக்கோளாய்
கொண்டுதான் சென்றனரோ
என்றெல்லாம்
எண்ணி எண்ணி
மண்டை வெடிக்கும் வரை
வீதியின் முனையில் நின்று
காலத்தை ஓட்டி விட்டேன்.

உன்னையே நீ அறிந்தால்
உலகம் உன்னதாகும்
என்றெல்லாம்
சொல்லுகின்ற வேதாந்தம்
என் மட்டும்
எள்ளளவும் பலிக்கவில்லை
வீதியையே, ஊரையே
உலகத்தையே நோக்கி நோக்கி
உளம் வெடித்துச் சாகின்ற
உன்மத்தன் ஆனேன்
உண்மை காணேன்.

இளமை கடந்து
நடுவயதெய்தி
முதுமை எட்டியபின்
வீதியின் முனையை விட்டு
நாற் சந்தியில்
வந்து நின்றேன்
நானுக, உன்மத்தனுக, உளம் வெடித்து—

நின்றதும்
நாற்சந்தியும் நடுத்தெருவும்
வீடும் வீதியும்
நடுவும் சந்தியும்
என்னில் புகுந்து என்னைக்
குழப்பி
எதுவும் புரியாத
ஏகாந்த வேளையிலே
என் எதிரில்
என்னையே நான் கண்டேன்!

பேயோ, பூதமோ, பிசாசோ
மற்றதுவோ
என்றெல்லாம் எண்ணி அஞ்சி
என்னுல் முடிந்தவரை
எட்ட எட்ட ஓடினுலும்
என்னை விடாது
நானே
பின் தொடர்ந்தேன்
ஓட்டமும் நிற்க வேண்டும்
நடைக்கும் முடிவுண்டு—
என்னைப் பொறுத்த மட்டும்
என் முடிவும் என்னுலே
என்னைத் தொடர்ந்த
நான்
என்ருே, என்னுலே
என் பயத்தாலே
முடிவு காண்பேன்—
ஏன் என்ருல்
என்னையே நான் பார்த்ததில்லை
வீதியின் முனையில் நின்று
மற்ருேரைப் பார்த்தே
என்
காலமெல்லாம் கடத்திவிட்டேன்.

முடிவுச் சொல்

இவை போன்ற புதுக்கவிதைகளுக்குத்தான் இனி தமிழ் இலக்கியத்தில் இடம்

(தி. சோ. வேணுகோபாலன் கவிதை 'பாரதி பரம்பரை' சங்கர பாலி டெக்னிக் மாகஜைன், 1962 பத்திரிகையில் வெளியானது: நன்றி)

எழுத்து 'முதலாவது'

இந்த ஆண்டில் எழுத்து சிறுகதைகளில் அக்கறை காட்டும் என்பதுக்கு ஏற்ப, பழய பெரியவர்களின் சிறுகதைகளை வெளியிடுவதுடன் புதிய சின்னவர்களின் சிறுகதைகளையும் வரவேற்கும் என்பதை காட்டவே இந்த பகுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எழுத்துவில் முதல் தடவையாக எழுதும் சிறுகதைக்காரருக்கே இங்கு இடம். இந்த பகுதிக்கு சிறுகதைகளை எதிர்பார்க்கிறோம். ஆனால், நாம் எதிர்பார்க்கிற 'ஒரு அளவு தரம்' இருந்தாகவேண்டும். இன்னொன்று: நாமாக சொல்லக்கூடாது தான்; என்றாலும், இன்று நிலவும் சூழ்நிலையில் ஒரு வார்த்தை, எச்சரிக்கை தேவை. 'மாரீசம்' வந்துவிடக்கூடாது.

—ஆசிரியர்

சுமை

வ. செளந்திரபாண்டியன்

கவலையின்மையால் வளர்ந்த உடலையும், உழைக்காததால் ஏற்பட்ட மதமதப்பையும் சுமந்து கொண்டு மலைப்பாம்பு போல் சோபாவில் நெளிந்து கொண்டிருந்தார் செல்வநாயகம் பிள்ளை. பார்வை மேல் உத்திரத்தில் பதிந்திருக்க, சிந்தனை எங்கெங்கோ அலைபாய்ந்தது. திடீரென்று ஏதோ ஓர் முடிவுக்கு வந்தவரைப் போல், சிந்தனையிலிருந்து விடுபட்டு பின்னால் இருந்த ஜன்னல் பக்கம் திரும்பி, 'விசுவம்!—' என்று கூப்பிட்டார். அவர் சரீரத்திற்குத் தக்கபடி சாரீரம் இல்லை; கீச்சுக் குரல். தோட்டத்தில் வேலையாயிருந்த விசுவம் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தான்.

'கூப்பிட்டிங்களா?'

எண்சாண் உடம்பையும் ஒரு சாணுக்கிக் கொண்டு அவர் முன் வந்து நின்றான் விசுவம். 'ஆமாம் போய் வண்டியைக் கட்டு—' என்று கட்டளையிட்டார். விசுவம் வெளியில் சென்றான்.

சோபாவில் சாய்ந்து கொண்டிருந்த பிள்ளை விசுவம் சென்றவுடன் நிமிர்ந்து உட்கார்ந்தார். அவருக்கு எதிரில் சுவரில் ஓர் ஆள் உயரத்திற்குப் பதிக்கப்பட்டிருந்த அசல் பெல்ஜியம் கண்ணாடி அவர் உருவத்தை உள்வாங்கி வெளிக்காட்டியது. ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னைப் பற்றி நினைக்கும் போது—பார்க்கும்போது தன்னிடமுள்ள குறைகள் தெரிவதில்லை. நிறைவைத்தான் காண்கிறான்.

கண்ணாடியில் தன் உருவத்தைக் கண்ட பிள்ளை செருக்குடன் கூடிய பெருமிதமான சிரிப்பை உதிர்த்தார். கேட்காமலே வெள்ளிக் கம்பியாகி விட்ட தலைமுடியை அத்தர்க்கடை சாயபுவின் தனித்தயாரிப்பான கருப்பு மை முலாம் பூசி நின்றது. இயற்கையின் முன் செயற்கையின் ஜம்பம் சாயாமல் அங்கங்கே வரியிட்ட பிளவில் நரைதெரியும் கிராப், அகன்ற மாநிற மேனிக்கு ஏற்ப நெற்றியில் துலாம்பரமாகக் காட்சியளிக்கும் திருநீற்றின் மேல் செந்தூரப் பொட்டு, கழுத்தில் மைனர் செயின் என்ற பெயர் பூண்டு எல்லை கடந்து நிற்கும் ஐந்து பவுன் சங்கிலி, சில்க் ஜிப்பாவின் மூன்று காஜாக்களை மறைத்து அழகு தரும் வைரக்கற்கள் பதித்த தங்கப் பொத்தான்கள். அந்த மூன்று பொத்தான்களையும் இணைத்து நிற்கும் இரண்டு பவுன் சங்கிலி. பொத்தான்களுடன் இணைத்து வெளியில் வந்து விழும் நான்கு பவுன் டாலர் பிள்ளையின் முகவரியை விளம்பரப் படுத்திற்று.

இரு கைகளிலும் விரல்களுக்கு இரண்டு பவுனான கற்கள் பதித்த மோதிரங்கள்.

'ரோலக்ஸ்' கடிகாரத்தை தாங்கி நிற்பதற்கு நான்கு பவுன் செயின். அடுத்த கையில் மூன்று பவுன் காப்பு. காலில் சரியாக ஐம்பது ரூபாய்க்கு ஆர்டர் கொடுத்துச் செய்த பவுன் கலர் செருப்பு. நல்ல போஷாக்கும், மனப்பூரிப்பும் சேர்ந்து ஐம்பது வயது முதுமையைக் குறைத்து மதிக்க வைக்கும் தோற்றம். வெற்றிலைக் காவியேறிய பற்கள் வெளித்தெரியச் சிரித்த பிள்ளையின் முகம் ஏதோ ஒரு நினைவில் திடீரென்று மாறியது. நெற்றிச் சுருக்கங்கள் கோடு பதித்து நிமிர்ந்தன, மீண்டும் பழையபடி சோபாவில் சாய்ந்து கொண்டார்.

செல்வநாயகம் பிள்ளைக்கு இந்த உலகத்துக்கவலை ஏதாவது இருந்தால் அது 'தன்னை ராவணனைப் போன்ற ஒரு அவதாரமாக கடவுள் படைக்கவில்லையே' என்பது தான். அப்படிப் பிறந்திருந்தால் பத்துத் தலைகள், இருபது கைகள் இருக்கும். அதற்கு எவ்வளவு ஆபரணங்கள் அணியலாம்! உம்...கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

மதுரைக்கு அடுத்த ஊரான இடையகோட்டையில் பிள்ளைக்கு அடுத்தபடிதான் ஜமீனெல்லாம். ஒரு ஜமீனுக்கு மேற்பட்ட டாம்பீகம், செல்வம், அந்தஸ்து எல்லாம் அவரிடம் நிறைந்திருந்தது. எல்லாம் பிள்ளையின் சுயசம்பாத்யம். சில வருஷங்களுக்குள் சேர்த்த சொத்து. குலப்பெருமை கிளத்துமளவிற்குப் பரம்பரை அப்படி ஒன்றும் செல்வாக்குப்படைத்ததில்லை. இடையகோட்டையில் சில வருஷங்களுக்கு முன் வரை எங்கோ ஒரு அணுவாக இருந்தவர்தான் பிள்ளை.

கசாப்புக் கடைக்குக் காந்தியின் பெயர் வைக்கும் இன்றைய சமூக மேம்பாட்டில் பணம்தான் கடவுள்! இந்தப் பணக்கடவுளின் அருள்பெற உலகமே திரண்டு—தியானித்து நிற்கும்போது கடவுள்தான் என்ன செய்வார்! அவரின் அருள் எங்கோ ஒருவருக்குத்தான் கிடைக்கிறது. அந்த ஒருவராக ஆக பிள்ளை பட்டபாடு—வாழச் சகிக்காத சமூகத்தில் எதிர் நீச்சல் போட்டுக் கரையேறி நிமிர்ந்து, பணக்கடவுளின் அருள் பெற்ற

தின் மகிமை அவருக்குத்தான் தெரியும். சொல்லித் தெரிவதில்லை இந்தக் கலை. இந்தக் கலை கைவரப் பெற்றவர்களுக்கே புரியும் இதன் மகாத்மியம்.

பிள்ளை இடையகோட்டையில் எய்தாப் புகழ் எய்தி வாழ்கிறார்.

விசுவம் வண்டி தயாராகி விட்டது என்ற பாவனையில் அவர் முன் வந்து நின்றான். அவரின் சிந்தனை கலைந்தது. சோபாவை விட்டு எழுந்து கம்பீரமாக நடந்து சென்று வண்டியில் ஏறிக்கொண்டார். கீழ்த் தெரு ராஜபாட்டையில் வில்வண்டி பறந்தது. அந்த வண்டியையும், அவரையும் பார்க்கிற ஒவ்வொரு கண்ணும் பூத்துப் போகும், அப்படிப் பார்ப்பார்கள் ஆண்களும் பெண்களும். வண்டி பார்வையிலிருந்து மறைகிற வரைக்கும் கடிகாரச் சங்கிலியை ஒருவன் பார்த்துக்கொண்டு நின்றான். பொத்தான் டாலரை எத்தனை முறை அந்தப் பெண் இமை கொட்டாமல் பார்த்திருக்கிறாள்! அப்படியிருந்தும் இன்றைக்கும் நின்று பார்க்கிறாள். பிள்ளைக்கு பிடிபடாத பெருமை மனத்திற்குள் கட்டிப் புரண்டது. தன்னை ஒரு முறை ஏற இறங்க பார்த்துக்கொண்டார். தன் உடலில் ஜொலிக்கும் தங்க ஆபரணங்களைக் கண்டு ஒரு மகாராஜாவின் பூரிப்பு, கர்வம் தலைகாட்டியது. உடனே மனதில் அசைக்க முடியாத அந்த எண்ணம் எழுந்தது. 'எல்லாம் இங்கே தான் இருக்கிறது.' என்று ஒவ்வொரு பொருளையும் தடவிப் பார்த்துக் கொண்டார்.

பிள்ளை தலைநிமிர்ந்து ராஜகம்பீரமாக அப்படி ஒரு பார்வை பார்க்கும்போது போகிற வருகிற ஒவ்வொருவர் தலையும் தாழ்ந்து நிமிருகிறதே, அது ஏன்? எல்லாம் லெட்சுமியின் அருள். உலகமே வக்கில்த்தான் இருக்கிறது.

விசுவம் அவரைத் திரும்பிப் பார்த்து, அவர் குறிப்பறிந்து பொன்னம்பலம் அண்ணாச்சி வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தினான். அண்ணாச்சி பிள்ளையைப் பார்த்துவிட்டு, 'வாங்க! வாங்க!—' என்று வரவேற்று அவரை நாற்காலியில் உட்காரவைத்தார். 'கொஞ்ச நேரம் கழித்து வரலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே நீங்களே வந்துட்டீங்க.' —எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று விழித்துக்கொண்டிருக்கும் போது பொன்னம்பலம் அண்ணாச்சியே இப்படிப் பேச்சை ஆரம்பித்தார்.

'சும்மா அப்படியே உங்களை பார்த்திட்டுப் போகலாம்னு வந்தேன். அண்ணாச்சி! எனக்கு ரொம்ப நாளா ஒரு ஆசை, காசிக்குப் போயிட்டு வரணும்னு. திடீர்னு அந்த ஆசை முத்திப்போச்சு. இன்னும் ரெண்டு நாளிலே போகலாம்னு இருக்கேன். உங்களுக்கும் வர சௌகரியம் தானே?'

பிள்ளைக்குப் பொன்னம்பலம் அண்ணாச்சி பழக்கமானதிலிருந்து எங்கும் துணைக்கு உடன்போக, பொழுது போகாத நேரத்தில் புராணங்களைப் பற்றிச் சொல்ல எல்லாவற்றிற்கும் அவர்தான். வடதேசத்துப் பக்கம் போனா எழவு இந்தி தெரிஞ்சிருக்கனும். இல்லேன்னா இங்கிலீசாவது பழகியிருக்கனும். சும்மாப் போயி வாயிருந்தும் ஊமையாகி அவலை மென்று விட்டு வருவதில் என்ன லாபம்? பொன்னம்பலம் அண்ணாச்சிக்கு இந்த பாஷை எல்லாம் அத்துபடி. அவரையும் உடன் கூட்டிப் போவதால் கொஞ்சம் 'ஈஸியா' போயிட்டு வரலாம் அல்லவா. அதை உத்தேசித்துத்தான் அவரைப்பார்க்க வந்தார்.

அண்ணாச்சிக்கும் வெகுநாளாய் அந்தச் சபலம் உண்டு. கிடைத்த சந்தர்ப்பத்தை விடுவாரா?

இரண்டு நாட்கள் கழித்து இருவரும் காசிக்குப் புறப்பட்டுச் சென்றனர். ரயில் பிரயாணத்தில் வழி நெடுக அந்தப் பெட்டியில் இருப்பவர்கள் தன் ஒவ்வொரு பொருளையும் இமைக்காமல் கூர்ந்து பார்ப்பதை ஜாடையாகக் கவனித்தும் கவனிக்காதது மாதிரி நடித்துக்கொண்டு, அந்தந்தப் பொருள்களை எப்படி எப்படி விளம்பரப்படுத்த முடியுமோ அப்படி—அழகுடன் எடுத்துக் காட்டினார் பிள்ளை. நெஞ்சில் தாங்க முடியாத இன்பச் சுமையாக அந்தப் பெருமை கனத்தது.

வடதேசத்தில் ரயில் பேய் வேகத்தில் போய்க்கொண்டிருக்கும் போது, நடுவில் ஜபல்பூர் ஸ்டேஷனில் இளைப்பாறுவது போல் நின்று புறப்படும் சமயத்தில் ஒரு வெள்ளைக்கார ஜோடி வந்து அந்தப் பெட்டியில் ஏறிக்கொண்டனர். பிள்ளைக்கு அவர்கள் வந்து ஏறியது எரிச்சலாயிருந்தது. எவ்வளவு நிம்மதியா அண்ணாச்சி காசியின் மகிமையைப் பற்றி சொல்லிக்கொண்டு வந்தார். நல்ல கச்சேரியில் தொணதொணப்பு அருகில் வந்து உட்கார்ந்த மாதிரி, இவர்கள் நடுவில் வந்து என்னவோ புரியாத பாஷையில் பேசி உயிரை வாங்குகிறார்களே. கொள்ளாத வாயில் கொழுக்கட்டை அடைத்த மாதிரி தர்மசங்கடத்தில் குமைந்தார் பிள்ளை.

வெகு நேரம்வரை அவர்களை ஏறிட்டுப் பார்க்க எரிச்சல்பட்ட பிள்ளை யதேச்சையாக நிமிர்ந்தார். அவர் கண்களை அந்தப் பெண் கவர்ந்தாள். அவளும் அவரை உச்சியிலிருந்து உள்ளங்கால்கள் வரை இமைக்காமல் பார்த்தாள். ஃபாப் செய்த கிராப். அவளுக்குப் பிடித்தமான கவுன். சாயம் பூசிய உதடு. முகத்தில் பவுடர்பூச்சு. காலில் பாதம் உயர்ந்த பூட்ஸ். ஆபரணங்களை வேண்டி நிற்காத அழகு—வெள்ளை அழகு! அவர் மெய்ம்மறந்து உட்கார்ந்து விட்டார்.

அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பெண் குபீரென்று அடக்க முடியாமல் சிரித்து விட்டாள். கெக்கலி கொட்டி விழுந்து விழுந்து சிரித்தாள். பிள்ளையும் அண்ணாச்சியும் திருதிருவென்று விழித்தார்கள். அவள் கணவன் ஒன்றும் புரியாமல் அவளை அந்தக் கொரித்த பாஷையில் ஏதோ கேட்டான். அவன் கேட்டவுடன் முன்னைவிட அதிகமாகச் சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

பிள்ளைக்கு நெஞ்சுக்குள் உதைப்பு. தான் தற்செயலாகப் பார்த்ததைத்தான் தப்பாக அர்த்தம் பண்ணிக்கொண்டாளோ? மெய் விதிர்த்துப்போய் உட்கார்ந்திருந்தார். அவள் கணவனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. ஒன்றும் சொல்லாமல், எதிர்த்தாற்போல் இருப்பவர்களை அவமானப் படுத்தும்படி குபீரென்று சிரிக்கிறாளே. திரும்பவும் அவளை ஏதோ கோபமாகக் கேட்டான். அவள் அப்பொழுதும் சிரிப்பை அடக்க மாட்டாமல் பிள்ளையைச் சுட்டிக்காட்டி ஏதோ சொன்னாள். அவள் சொன்ன பதிலைக்கேட்டு அவன் முகம் சாந்தமடைந்தது. அவனும் பலமாகச் சிரித்தான். அவர்கள் சிரிப்பிற்கு ஒரு எல்லைபோல் அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றது. அந்த தம்பதிகள் இறங்கிச் சென்று விட்டார்கள்.

ஒன்றும் புரியாமல் முகத்தில் அசட்டுக்களை கோலமிட உட்கார்ந்திருந்த பிள்ளை, உள்ளத்தில் முட்டி மோதிய சந்தேகத்தை ஜீரணிக்க முடியாமல் கேட்டே விட்டார்.

'ஏன் அண்ணுச்சி! அந்தப் பெண் எதற்காக அப்படிச் சிரித்தாள்?—'

பொன்னம்பலம் அண்ணுச்சி சற்றும் எதிர்பார்க்கவில்லை, அவரிடமிருந்து இத்தகைய கேள்வி எழும் என்பதை. திடுக்கிட்டுப் போனுர். பிள்ளை அந்த விஷயத்தை லட்சியம் செய்திருக்கமாட்டார் என்று நினைத்ததற்கு மாருக அதை ஒரு பிரச்னையாக எடுத்துக்கொண்டு கேட்கிருரே. அண்ணுச்சி முன்யோசனைக்காரர். கொஞ்சம் தன் நிலையை நினைத்துப் பார்த்துக்கொண்டார். வந்திருப்பது அவரின் தயவில் என்பதை மனத்தில் கொண்டு திணறிஞர். இந்தப் போராட்டம் ஒரு விநாடிதான். மறுநிமிஷம் தன் பிறமொழிப் புலமையை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது பற்றிப் பெருமைப் பட்டுக்கொண்டார். புன்னகையுடன் அந்த வெள்ளைக்கார ஜோடி பேசியதை மொழி பெயர்த்துச் சொன்னுர்.

'அவர்கள் ஊரில் பெண்கள்கூட நகைகள் போடமாட்டார்களாம். நாகரிகத்தின் உச்சியிலிருக்கும் இந்தக் காலத்தில் கூட பிள்ளை கர்நாடக இந்தியப் பெண்ணைப் போல் நகைகள் போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டவுடன் சிரிப்பை அடக்க முடியவில்லையாம்.''

அண்ணுச்சி சொல்வதை மௌனமாக உம் கொட்டி கேட்டுக் கொண்டிருந்த பிள்ளையின் முகம் அந்த ஒரு கணத்தில் கரிபூசியது போல் மாறித் தன் நிலைக்கு வந்தது. அவரின் மனதில் பலத்த போராட்டம். சட்டென்று, 'ஏன் அண்ணுச்சி! அந்தப் பெண் சொன்னது சரிதானு?' அண்ணுச்சியை நிமிர்ந்து பார்த்துக் கேட்டார்.

"நீங்க ஒரு பக்கம்! அவள் சொன்னதை ஒரு பொருட்டாக மதித்துக் கொண்டு. பொதுவாக வெள்ளைக்காரர்களுக்கு இங்கிதம்——தன்மை என்பன போன்ற பதங்களுக்கு அர்த்தம் தெரிவதில்லை. அவர்கள் பண்பே—நாகரிகமே ஒரு வெறியில்—அவசத்தில் ஜனித்த மிருகத்தனம். சதா யந்திரம் போல் இருக்க வேண்டும்.

"நாம் அப்படியில்லை. ஆழ்ந்த அமைதியில், மனத் தெளிவோடு பிறந்த பண்புகள் ஆயிரம் ஆயிர வருட காலமாய் நம் உடம்பில்—உணர்வில் ஊறிப்போனவை. சட்டென்று நாமும் அவளைக் கேட்டுவிடக் கூடாதா? ''என்னம்மா துணி கிடைக்காத ஆதி மனுஷன் இலை தழைகளைக் கட்டிக் கொண்டு திரிந்தது போல், உடம்புக்கு பத்தியும் பத்தாமலும் உடை போட்டிருக்கியே''ன்னு. அப்படி நாம் கேட்க மாட்டோம். ஏன்? ஒவ்வொரு நாட்டின் பண்பாடு - பரம்பரை வளமுறை அப்படியிருக்கும். அதுக்காக அவர்களை கேலி பண்ணி விடுவதா? நம்ம நிதானம் நம்மளுடன். அவர்களின் அவசரம் அவர்களுடன். கிடக்கிறது! சிறுபிள்ளைகள்''

அண்ணுச்சி பிள்ளைக்கு கொம்பு சீவி விட்டார்.

பிள்ளை திரும்ப ஒன்றும் கேட்கவில்லை. அண்ணுச்சி தன் நிலையை உத்தேசித்துக் குளிப்பாட்டுகிருர் என்பதை புரிந்து கொண்டார். நாலு விஷயமும் தெரிந்த நாக்கு சமய சந்தர்ப்ப, சாட்சியங்களை நாணல் மாதிரி தன் போக்கிற்கெல்லாம் இழுக்கும். அண்ணுச்சி அதற்கு விதி விலக்கா. பிள்ளைக்கு அவர் சொன்னது சரியாகப்படவில்லை. அந்தப் பெண் கேட்டது தான் நியாயம் என்று பட்டது. அண்ணுச்சி கூட அன்று ஒரு நாள் சொன்னுரே, "அனுபவமும் வயதும் அதிகமாக ஆக, ஆசைகள் ஒவ்வொன்றும் கழன்று மீதி இருப்பது சாவு ஒன்று தான் உண்மை—நிச்சயம் என்று தெரியும். அந்த ஞானம் பிறந்த பின் உடம்பில் இருப்பது ஒரு துண்டு தான் மானத்தைக் காக்க''.

"அப்படின்னு உலகம் ஏன் செல்வத்தை வைத்து நம்மை மதிக்கிறது—கௌரவிக்கிறது?''

"அதெல்லாம் வேஷம். எல்லாம் நம்முடன் இருக்கிறவரை தான். அடுத்தவர் கைக்கு அந்தச் செல்வம் மாறி விட்டால் அவன் தான் அந்தப் பெருமைக்கு உரியவன்''.

'பின் ஏன் நமக்கு இத்தனை நாளும் இது தெரியவில்லை?''

"நம்ம என்னங்க சின்னப் பிள்ளைகள் தானே. எல்லாம் அனுபவப் படபடத்தானே புரியும்''

அன்றைக்கு அவர் சொன்ன வார்த்தைகள் கல்வெட்டுப் போல் இன்று வரை மனத்தில் பதிந்திருக்கின்றன. பிள்ளை ஆழ்ந்த நெடு மூச்செறிந்தார்.

காசி ஸ்டேஷனில் வண்டி நின்றது. வண்டியை விட்டு இறங்கியவுடன் இருவரும் கங்கையை நோக்கிச் சென்றனர். வழியெல்லாம் பிள்ளைக்கு ஏதோ பளுவைத் தூக்கி சுமப்பதுபோல் இருந்தது. அண்ணுச்சியிடம், "ஏன் அண்ணுச்சி, உடம்பு ரொம்ப கனமா இருப்பது போல் தோன்றுகிறதே உங்களுக்கு அப்படி இருக்கிறதா?'' என்று கேட்டார். அவர் இல்லையென்று சொல்லி விட்டார். பிள்ளை தன் நினைவின்றி நடந்தார். செல்வம் ஒரு சுமை. சுமை தான் பாவம். பாவமே நரகம். கருமத்தைப் போக்க வந்த காசியில் கூட......... மேல்த்துண்டை நன்ருக இழுத்து விட்டுத் தங்கப் பொத்தான்கள், டாலர், செயின் எல்லாவற்றையும் மறைத்தார். இரண்டு கைகளையும் பின்னுல் கட்டிக் கொண்டு நடந்தார்.

ஒவ்வொரு பொருளும் ஒரு அரவம். அரவத்தின் குணம் விஷம். பிள்ளைக்கு ஒவ்வொரு பொருளும் உடம்பைத் துளைப்பதைப் போல், விஷம் தலைக்கேறுவது போல் இருந்தது. நடை தள்ளாடியது. சிரமப்பட்டு கங்கைக் கரைக்கு வந்து சேர்ந்தார்.

தனக்கே உரித்தான கம்பீரத்துடன் கங்கை ஓடிக் கொண்டிருந்தது.

பிள்ளையைப் புரிந்து கொள்ளாத அண்ணுச்சி நதியைப் பார்த்துக் கொண்டு சொன்னுர், ''அழியும் சிருஷ்டிகளை வாதப் பொருளாக்கிக் கொண்டு மனிதன் நாத்தீகம் பேசியபோது, கடவுள் மலையை, கடலை, நதியைப் படைத்திருக்க வேண்டும்.''

அண்ணுச்சியின் மேதையைப் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை பிள்ளை.

இருவரும் நதியில் இறங்கிக் குளித்தார்கள். கங்கையில் மூழ்கி எழுந்திருக்கும் போது, பொங்கி வரும் ஆற்றின் ''ஹோ'' வென்ற பிரவாக இரைச்சல் அந்த வெள்ளைக்காரப் பெண் சிரிப்பது போல் இருந்தது பிள்ளைக்கு.

குளித்து விட்டு நேரே கோயிலுக்குப் போய் விஸ்வநாதரைத் தரிசித்து விட்டு நிமிர்கையில், அம்பாள் அன்னபூரணி சிரிப்பது போல் பட்டது. பிள்ளை திடுக்கிட்டார். எல்லாம் மனப்பிரமையோ? அப்படி ஒன்றுமில்லையே. இல்லையென்றால் அம்பாளின் சிரிப்பு? அந்தப் பெண் சிரிப்பது போல் அல்லவா இருக்கிறது. அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போலிருந்தது. இதென்னகைகளை விலங்குஇறுக்குவதுபோலிருக்கிறது? பிள்ளை மருண்டு போய் கைகளைப் பார்த்தார். விலங்குமில்லை மண்ணுமில்லை. காப்பும் கடிகாரமும் தான் இருந்தது. ''ஏன் என்னை எல்லாம் குழப்படிக்கிறது?'' பரிதாபமாய் விழித்துக் கொண்டு நின்று விட்டார்.

அன்று ஊரைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும் போது எங்கு பார்த்தாலும் அந்தப் பெண்! அவள் சிரிப்பாகவே தெரிந்தது. சே, சே, பிள்ளைக்கு எல்லாமே ஒரே இருளாகத் தெரிந்தது. மறுநாளே ஊருக்குப் புறப்பட ஆயத்தமானார்.

மறு நாள் ஊருக்குப் புறப்பட்ட போது, இனி ஒரு தரம் கங்காஸ்நானம் கிடைக்குமோ என்னவோ இன்னும் ஒரு முறை நீராடி விட்டுப் போவோம் என்று கங்கைக்குச் சென்றார்கள். உடலிருந்த நகைகளை ஒன்று விடாமல் கழற்றி கரையில் வைத்து விட்டு நதியில் இறங்கி குளித்தார் பிள்ளை. அண்ணாச்சி இவருக்கு முன்பு இறங்கி குளித்துக் கொண்டிருந்தார். பிள்ளை கங்கையில் முக்குளித்து எழும் போதெல்லாம் அந்தப் பெண்! அவள் சிரிப்புத்தான் முன் நின்றது. அவரின் இதயத்தில் ஐஸ் ஈட்டியை கொண்டு சொருகுவது போல் இருந்தது அது.

''நோயுற்றுத் தளராமல்
நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல்
பாவியேன்—காயத்தை

மார்பளவு தண்ணீரில் நின்று தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தார் அண்ணாச்சி.

பிள்ளை கடைசியாக முக்குளித்து எழும்போது தற்செயலாக ஓடிவந்த ஒரு குழந்தை விளையாட்டாக அவரின் ஒவ்வொரு பொருளையும் எடுத்து கூழாங்கல்லாக தண்ணீரில் விட்டெறிந்து ஆனந்தித்துக் கொண்டிருந்தது.

கரையேற திரும்பிய அண்ணாச்சி இந்தக் காட்சியைப் பார்த்து பதறிப் போய் பிள்ளையைப் பார்த்தார். அவர் முகமலர்ச்சியுடன் அந்தக் குழந்தையின் செய்கையை ரசித்து பார்த்துக் கொண்டிருந்தார். ''என்னங்க''... கரையை நோக்கி ஓடப்போன அண்ணாச்சியை பிள்ளை தடுத்து விட்டார். அவரின் போக்கு அண்ணாச்சிக்குப் புரியவில்லை.

அலைபாய்ந்து தத்தளித்துக் கொண்டிருந்த பிள்ளையின் மனம் நிதானமடைந்தது. உள்ளத்தின் உள்ளே ஆழ்ந்த அமைதி. கரைக்கு வந்து பையிலிருந்து அந்த நாலு முழக்கதர் வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டார். அந்தக் கம்பி போட்ட இற்றுப் போன துண்டை உடம்பைச் சுற்றிப் போர்த்திக் கொண்டார். ஒரு முறை திரும்பி கங்கையைப் பார்த்தார்.

கங்கை நதி நிர்ச்சலனமாக ஓடிக்கொண்டிருந்தது.

படுக்க ஒரு இடம்

—ஜான் ஹீத் ஸ்டப்ஸ்

படுக்க இடம் தேடி ஒரு கவிஞன்
கையில் அதுக்கான பணத்துடன்
ஹோட்டல் ஒன்றை அடைந்தான்:
'ஒருவருக்கு'
ஒருக்கால் எனக்கொரு நண்பன் கிடைத்தால்
இருவருக்கு
அறை கிடைக்குமா இரவுக்கு?'

'ஆகா கிடைக்கும்' என்றது உபசரிப்பு மேஜை,
'புஸ்தகம் இதோ, எழுது உன்பெயரை தொழிலை.'
'பெயர் ஆஸ்தான கவி ஷெல்லிகீட்ஸ் தொழில்கவிஞன்
என்று எழுதினான் அவன்
'மன்னிக்கவும்' என்றது உபசரிப்பு மேஜை,
'கவிகளுக்கு இடம் இல்லை இங்கு
காசு அவர்கள் கொடுப்பதே அரிது.'

'நான் என்னதான் செய்ய?' என்றான் கவி.
'மன்னிக்கவும்' என்றது உபசரிப்பு மேஜை.
ஆனாலும்,
அன்புக்குண பொருள் ஆனதினாலே
முன்பு சாய்ந்து காதோடு ஓதியது:
'இரு கதவுதள்ளி விசாரி வீதியிலே
கவிகளை விரும்புவோர் உண்டு அங்கே.'

வீதியில் இரு கதவுகள் தள்ளி
இருந்தது ஒரு விளம்பர ஏஜன்ஸி,
அன்போடு அணைத்தது அவனை
தன் எண்கை பரப்பி:
'கவிகளை பிடிக்கும் எமக்கு,உள்ளே வரவும்;
எமக்கு உழைப்பவர் கவிகள்,
அவர்கள் எழுதுவதெல்லாம் நினைவில் நிற்கும்
கோஷச் சொற்கள்;
உள்ளே வரவும், இரவு ஷிப்டில் சேரவும்.'

'எனக்கு விருப்பம் இல்லை வேலைசெய்ய
நான் விரும்புவது சும்மா தூங்க'
என்றான் கவி.
'இரு கதவுதள்ளி விசாரி வீதியில்
யாரும் தூங்கலாம் அந்த இடத்தில்'.

இரு கதவு தள்ளி வீதியில்
இருந்தது ஒரு இடுகாட்டு வாசல்.
'படுக்க ஒரு இடம்' என்றான் கவி
'ஒற்றை, இரட்டை, நடுவாந்தரம்
எதானாலும் சரி, நான் ஒரு கவி.'
'மன்னிக்கவும்' என்றான் இடுகாட்டு
சம்பளக்கார நரைத்தலை நிர்வாகி,
'கவிகளுக்கு இடம் இல்லை இங்கு.'

'ஏன் இல்லை, யாரும் தூங்கலாமே இங்கு'
என்றான் கவிஞன். 'முடியாது' என்றான் நிர்வாகி,
'அக்கம் பக்கத்தார் முணுமுணுப்பர்
பிணம் எல்லாம் எழுந்து கூத்தாட விடவா?'

(மொழிபெயர்ப்பு சி. சு. செ.)

லண்டனிலிருந்து வெளிவரும் 'பொயட்ரி ரிவ்யூ'வின் சரத்கால ஏட்டிலிருந்து—நன்றி.

சில்லறை

புதுமைப்பித்தனுக்கு அல்வாத்துண்டுகள்

உள்ளே ஓடும் ஒரு ஆராய்ச்சிக் குரல் கேட்கிறது ஒரு கேள்வி. புதுமைப்பித்தன் இன்றைக்கும் இருந்தால், வசன கவிதை என்று அவர் விமரித்த புதுக் கவிதைகளைத் தூற்றுவாரா? என்ன இது பிரமை! புதுமைப்பித்தன் புதுமையை விரும்பிய ஒருவர். அவருடைய கட்டுரையொன்றில் கீழ்வரும் கருத்தோட்டம் காணப்படுகிறது. ''இன்று ரூபமற்ற கவிதையெனச் சிலர் எழுதிவருவது, இன்று எவற்றையெல்லாம் ரூபமெனப் பெரும்பாலோர் ஒப்புக் கொள்கிறார்களோ அவற்றிற்குப் புறம்பான ரூபத்தை அமைக்க முயலுகிறார்கள் எனக் கொள்ளவேண்டுமே ஒழிய, அவர்கள் வசனத்தில் கவிதை எழுதுகிறார்கள் என்று நினைக்கக் கூடாது. அவர்கள் எழுதுவது கவிதையா இல்லையா என்பது வேறு பிரச்னை. இன்று வசன கவிதையென்ற தலைப்பில் வெளிவரும் வார்த்தைச் சேர்க்கைகள் வசனமும் அல்ல; கவிதையும் அல்ல.'' இதில் 'இன்று' என்று அவர் வாழ்ந்த காலத்தையே குறிப்பிட்டார் புதுமைப்பித்தன். அவர் இன்றும் இருந்தால் வளர்ந்துள்ள புதுக்கவிதைகளைப் போற்றுவார் என்பதற்குச் சாய்வான கருத்தோட்டம் இது. புதுமைப்பித்தனுக்கு அல்வாத் துண்டுகள் இன்றைய புதுக்கவிதைகள் என்பது வெறும் பிரமையல்ல; உண்மை.

சிலம்பு ஒலிக்கிறது

கொஞ்ச காலத்திற்கு முன்பே கம்பராமாயண ஆராய்ச்சி தொடங்கி விட்டதல்லவா? இன்று சிலப்பதிகார ஆராய்ச்சி எழுந்திருக்கிறது. காரணம் என்ன? ஏட்டிக்குப் போட்டி என்று காரணம் காண்பது அடுக்காது இந்திய தேசீய் சுதந்திர மலர்ச்சியின் சமீபத்தில் அகில இந்திய இதிகாசக் கதையை வைத்துப் பாடிய கம்பன் ஆராய்ச்சி கால இயல்போடு தோன்றியதில் வியப்பில்லை. சுதந்திர வாழ்வியல் வளரும் பின்னணியில் தமிழர் வாழ்வு பற்றி எண்ணுகையில், இளங்கோவின் காவிய ஆராய்ச்சி எழுந்திருப்பது நல்லதோர் இயற்கை. இது மேலும் வளராமல், போட்டிப் பூதம் புறப்படுவது நாட்டில் நல்லதா?

பல்கலைக்கழகத்தில் பாரதி

தமிழகத்தின் இரு பல்கலைக்கழகங்களும் சங்ககால, இடைக்கால இலக்கிய ஆராய்ச்சிக்கு வழி வகுத்து வரும் பணியில், இன்று பாரதியின் கவிதை ஆராய்ச்சிக்கும் புதிய பாதை போட்டிருக்கின்றன. பாரதியின் பெயரால் பல்கலைக் கழகமே உருவானால் இன்னும் மேலானவை நடக்கும். பாரதிக்கு பின் தோன்றியுள்ள நல்ல சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை இலக்கியங்களின் பக்கமும் பல்கலைக்கழகத் தராசுதுலை திரும்பும் எனவே புதுமை இலக்கியர்கள் பல்கலைக்கழகத்தில் பாரதியை, பாரதியைப் பல்கலைக்கழகத்தில் காண விழைகிறார்கள்.

''படிப்பு வளருது; பாவம் தொலையுது;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான், ஐயோவென்று போவான்''

சொல்லை ஆக்குவோம்

நாட்டில் எந்திரங்கள், போர்க்கருவிகள், அணைகள், தொழில்கள் மனைகள் இன்னும பற்பல ஆக்குவது போல் மொழியில் சொல்லையும் ஆக்குவது நம் கடமை. இன்று வழங்கும் கவிதை என்னும் சொல்லாக்கம் பழமைக் காலத்தில் வழங்கியதாகத் தெரியவில்லை. கம்பன் காலத்தில் கவி என்ற சொல் தான் வழக்கில் இருந்திருக்க வேண்டும். அதற்கு முன் பாட்டு, செய்யுள் இருந்தன. இந்தக்கவிதைஎன்னும் சொல் இருபதாம் நூற்றாண்டின் பிறப்பு எனத்தெரிகிறது. பாரதி, வ. வே. சு. ஐயர், வேதநாயகம் பிள்ளை போன்ற இலக்கியர்களின் சூழலில் இது பிறந்து வளர்ந்திருக்கவேண்டும். வசனகவிதை என்பதோ பாரதியின் புதிய ஆக்கம். 'ரிதும்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'இழும்' என்று ஒரு மொழி பெயர்ப்பு இருந்தது. இப்போது ஒத்திசை, ஒலிநயம் என்ற இரு சொற்கள் வழங்குகின்றன ஒத்திசை என்று ஆக்கியவர் வையாபுரிப் பிள்ளை. ஒலிநயம் என்பவர் மு. வரதராசனார். ரசனை, விமரிசனம், திறனாய்வு ஆகிய மூன்றும் ஒன்றையே குறிக்கும் சொற்கள். முதல் இரண்டும் வ. வே. சு. ஐயரின் படைப்பு. திறனாய்வை ஆட்சி செய்வோர் மு. வரதராசனாரும் அ. ச. ஞானசம்பந்தமும். இப்படியே 'ரியலிசம்' என்பதைக் குறிக்க யதார்த்தம், நடப்பியல், வாய்மையியல் என்று மூன்று சொற்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன ஒரு பொருளைக் குறிக்க இத்தனைச் சொற்களா? ஒரே சொல் போதுமே!

கொச்சை புகினும் மெச்ச நன்றே

கவிதையில் கொச்சை வழக்குச் சொற்களைச் சேர்த்து எழுதலாமா? சிரிப்பாணி, குடுசங்கி, லாலாயம், காலறுவான், மொண்டி, சித்தே என்பவை போன்ற கொச்சைகளும் கவிதையில் வர எழுதினார் ஒரு தமிழ்க் கவிஞர்.

''கரப்பானைப் போன்ற பல
காலறுவான் எத்தனை பேர்
மொண்டி யரசாட்சி
மூடக் குரோதத்துடன்
தண்டெடுத்து..............''

என்னும் வரிகளைச் சந்தர்ப்பச் சூழ்நிலையை ஒட்டிப் பார்க்கையில் மிகவும் உணர்வு சிறந்தவை; புதுமைப் பித்தனின் மாகாவியத்தில் வருகின்றன.

திருக்குறள் இலக்கணம்

இந்தக் காலம் திருக்குறளை இலக்கணமாகவும் காண்கிறது. இலக்கிய ஆய்வு நெறிகளுக்குத் திருக்குறளின் சில குறட்பாக்கள் இன்று பயன்படுகின்றன,

''குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்''.

''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு''.

''நிலத்திற் கிடந்தமை கால் காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்.''

—'லட்சுமிபதி'

பல்கலை கழகத்தில் இலக்கிய விமர்சகன்
(30-ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கொள்கிற மாதிரிதான். இதன் உபயோகம் பற்றி எனக்கு சந்தேகமே. ஆக்ஸ்ஃபோர்:டைவிட கேம்: பிரிட்ஜில் அடிக்கடி சொல்லிக் கேள்விப்பட்டிருக் கிறேன். ஒரு இங்கிலீஷ் பள்ளியின் வேலை, எழுத்தாளரை உருவாக்குவது இல்லை, விமர்சகர்களை தயாரிப்பதுதான் என்று. ஆனால் அவர்களுக்கு இருபத்திரெண்டு ஆகும்போது இரண்டில் ஒன்றாக தாங்களாக ஆரம்பிக்கும் நிலைக்கு அவர்களை கொண்டு வந்து விட்டால் அதுவே அதிர்ஷ்டவசமானது என்றே நான் நினைக்கிறேன். எது எப்படி இருந்தாலும் என் அனுபவம் இதுதான்: ஒரு பல்கலை கழகத்தில் இருந்து விமர்சனம் கற்பிக்கும் முயற்சியில் ஈடுபடும் ஒரு இலக்கிய விமர்சகன் சக்தி இல்லாத கடின உழைப்பில்தான் ஈடுபடுகிறான். அதோடு வாழ்க்கையை லேசாக ஏற்றுக்கொண்ட தன் சகபாடிகளைவிட அதிகமாக எதுவும்காண்பிக்கவும் முடிகிறதில்லை. அவர் மாணவர்கள், போதித்ததை நன்றாக திருப்பிச் சொல்வார்கள். ஏனென்றால்—இது ஒரு வருத்தப்படத்தக்க விஷயம்—ஒரு கலைஞனதைப் போல ஒரு விமர்சகனுடைய முறைகளும் மனப்பாங்கும் அப்படியே பின்பற்றும் மன இணக்கம் ஏற்படுத்திவிடும். சின்ன ஈக்கள் பெரிய ஈக்கள் முதுகுமீது உட்கார்ந்து அவைகளை கடிக்கிறதுண்டு. கலையைவிட விமர்சனத்தில் இது குறைவாக இல்லை. உண்மையான திறமை உள்ள ஒரு இளைஞன், திட்டவட்டமான அபிப்ராயங்களும் உருவான மனப்பாங்கும் கொண்ட ஒரு விமர்சகனால் கற்பிக்கப்பட்டவன், உண்மையில் வேதனை கொடுக்கும் மறு மதிப்பீட்டை தான் நேர் எதிர்காண நேரிடும். மீண்டும் ஆரம்பிக்கிற ஒரு இடத்துக்கு அவன் வழி வெட்டிச் செல்லவேண்டி இருக்கும். முடிவில் அவனை விமர்சகனாக ஆக்க முயல்வதைவிட ஒரு சில லேசான தகவல்களை போதித்திருந்தாலே பிரியமானதாக இருந்திருக்கும் என்று தோன்றச் செய்யும். ஒரு சில லேசான தகவல்கள்' என்ற சொல் தொடரை அதிகம் பரிகசிக்கப்படும்தான். ஆகவே நான் அதைத்தான் குறிக்கிறேன் என்று திரும்பச் சொல்லவேண்டும். ஒரு சில. லேசான. தகவல்கள் என்று சொல்கிறேன். இருபத்திரெண்டு வயது வாலிபன் ஒருவனால் வேறு ஒருவரிடமிருந்துபொறுக்கின பகுத்துணர்தல்' மூலம் ஏராளமாக அளப்பதைவிட, சாஸரிலிருந்து சில பக்கங்களை விளக்கவோ பார:டைஸ் லாஸ்ட்' பதினைந்து வரிகளிலிருந்து விஷயங்களை விளக்கவோ முடிவதையே நான் விரும்புகிறேன். இங்கிலீஷ் இலக்கியத்தில்—நான் பார்க்கிறபடி—ஒரு பல்கலை கழக ஆசிரியரின் வேலை, இங்கிலீஷ் மரபில் வந்த பெரிய நூல்களிடையே ஜனங்களை நடையாக அழைத்துச் சென்று காட்டி தாங்கள் சொன்னது சம்பந்தமாக அந்த நூலாசிரியர்கள் என்ன நினைத்தார்கள் என்று ஏதோ கொஞ்சம் அவர்கள் தெரிந்துகொள்ளச் செய்வதுதான். உண்மையாக அவர்கள் சொன்னது என்ன, என்பதுபற்றிய சர்துர்ய விசாரணையும் ஒன்றைவிட மற்றது விரும்பத்தக்கது ஏன் என்பதும் பின்னால் வரட்டுமே.

'பின்னால்' என்பது பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். தங்கள் முதல் பள்ளிப் பட்டத்தை பெற்ற பிறகு பல்கலை கழகத்தில் கொஞ்சம் தங்குவது என்பது இளைஞர்களிடையே இப்போதெல்லாம் அதி கரித்துவிட்ட நாகரீகமாக இருக்கிறது ஒரு டாக்டர் பட்டம் இல்லாமல், இல்லை, ஏதாவது ஒரு இரண்டாவது பட்டமாவது இல்லாத ஒரு பல்கலைகழக ஆசிரியரை பார்ப்பது அரிதாக இருக்கிறது. இது நான் நினைக்கிறேன், நம் அமெரிக்கப் பின்பற்றலின் போக்கு என்று. இருந்தாலும் ஏதோ மோகம் என்று உதறிவிட முடியாது இதை. மாதிரி காட்டி சொல்லப்போனால் ஆக்ஸ்ஃபோர்:டில் இங்கிலீஷ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்பவர் நூறு பேர் இருக்கிறார்கள். அவர்கள் என்னதான் செய்து கொண்டிருக்கிறார்கள், அந்த அளவு சக்தியை இன்னும் லாபகரமாக பயன்படுத்த முடியாதா என்று திட்டமாக அறிய அக்கறை காட்டியாக வேண்டும். இந்த விஷயத்தை நானே கையாள விரும்பவில்லை. ஏனென்றால், போதுமான வலு இல்லை என்று நான் சொல்லும் எதுவும் தள்ளிவிடப்படக்கூடும். ஆனால் இங்கு நான் தேர்ந்து எடுத்துள்ள விஷய நோக்கிலிருந்து—பல்கலை கழகத்தில் இலக்கிய விமர்சகன்—நான் சொல்லவேண்டியது ஒன்று இருக்கிறது. (அடக்கத்தோடு கேட்கிறேன், லட்சியம் செய்யாவிட்டாலும் சரி. ஆண்டுக் கணக்கான 'கழுதைப் பிழைப்பு' வேலையால் மக்கி மரத்துப்போகாமல் இருக்கிற இந்த புது, சுறுசுறுப்பான இளைஞர் படை இலக்கிய விமர்சனத்தில் ஈடுபட ஊக்குவிக்க சாத்தியமில்லையா? அவர்களது வாழ்வில் பழப்பருவ, உருவாகிற காலத்தை இலக்கிய சரித்திரத்தின் நுட்பங்களையே ஆராய்வதுக்கே அர்ப்பணித்துவிட வேண்டும் என்பது என்ன மாற்ற முடியாத இயற்கை நியதியா என்ன?

நான் கேட்கத்தான் செய்கிறேன். ஆராய்ச்சி முக்யமானது என்பது எனக்குத் தெரியும். 'இந்த பிரச்னை எனக்கு ரொம்ப முக்கியம்...' என்று தனக்கு சொல்லிக்கொள்ளும் எந்த இளைஞனையோ வயதானவரையோ தடுக்க நான் முற்படமாட்டேன். அதை நான் மதிக்கிறேன். ஆனால் 'ஆராய்ச்சி செய்ய ஏதாவது விஷயம் எனக்குச் சொல்லு' என்று நம் பல்கலை கழகங்களில் எல்லாம் பகல் முழுக்கசிணுங்கல் கேட்கிறதே அதுதான் எனக்கு வெறுப்பை தருகிறது. உன் மனதில் ஒரு பிரச்னை உண்மையாகவே எழுகிறவரை வந்தாலொழிய நீ ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடாது—இல்லை உன் திருப்திக்குசெய்ய போதியபணம் இருந்தாலொழிய. அதுதான் யாரிடமும் இந்த காலத்தில் இல்லையே. 'ஹா, ஒரு முறையை கற்பிக்கவே இது செய்யப்படுகிறது'. இந்த புனித சொல்முன் நாம் விழுந்து கும்பிடவேண்டி இருக்கிறது. 'கைத்திறன் கற்பிக்கப்பட்ட மந்த புத்திக்காரர்கள் சாந்தம் சேர்ந்த மந்தமாக இருக்கிறார்கள்' என்று மிஸ்டர் அல்வாரஸ் குறிப்பிட்டார். முறை கற்பிக்கப்பட்ட மக்குகள் அதிக அதிகாரத்துடன் கூடிய மக்குகளாகவே இருக்கிறார்கள். பொறுப்பான பதவிகளில அவர்கள் புகுந்து கொண்டு தங்களது வாங்கிக் கொள்ள முடியாமையின் வியாதியை நாற்பது ஆண்டு காலம் இளைஞரிடையே பரப்புவார்கள். பள்ளிக்கூடத்தில் இரண்டாவதாக சுரண்டிக் கொண்டிருக்கிற ஒரு ஜேக் ஸ்மித் முறை கற்றுக்கொடுக்கப்பட்டால் தன் ஆராய்ச்சிக்குப்பேர்போன டாக்டர் ஜே ஸ்மித் ஆகிவிடுவார். இங்கிலீஷ் இலக்கியத்தில் பேராசிரியர் இன்னார்-இன்னார், அவருக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.. என்று எழுதப்பட்ட புத்தக அடிக் குறிப்புகள் ஏராளம். நல்ல

பாண்டித்யமான 'ஆராய்ச்சி' பற்றிய கண்டனம். பெரும்பாலும் உண்மையாக எது தேவை என்பதை உணராத அறியாமையில் எழுந்தது ஆகும். ஒரு பாமரனுக்கு உபயோக மற்றதாகப் படும் ஒரு ஆராய்ச்சி விஷயம் ஒரு முக்கிய சங்கிலியில் இணைப்பு ஏற்படுத்துவதாக இருக்கலாம். 'முறை' பற்றிய இந்த விவரத்தத்தை விட்டுவிடுவோம். எதாவது கண்டுபிடிக்க ஒருவன் விரும்பினல் அவன் கண்டுபிடித்தே தீருவான். தாமஸ் வார்ட்டனுக்கு யார் முறை கற்பித்தார்கள்? அல்லது வார்பர்ட்டன், ஜான்ஸன், தியோபால்ட் இவர்களுக்குத்தான்?......

ஆகவே தன்னடக்கத்துடன் அடிப்படை விஷயத்துக்கு திரும்புகிறேன். இடுப்பு வரை குனிந்து ஒரு கேள்வி கேட்கிறேன். மேலும் பட்டங்கள் பெறும் சில இளைஞர்களுக்கு தாங்கள் விரும்பும் விஷயம், நூலாசிரியர் பற்றி விமர்சன கட்டுரை எழுத சாத்திய மாகாதா? சாலரிட்ஜி சொன்ன அர்த்தத்தில் தவிர வேறு 'ஆராய்ச்சி' யொடு சம்பந்தப்படாத கட்டுரை எழுதமுடியாதா? அது அந்த விஷயம் பற்றி இன்னும் முக்கியமானதாக இருக்குமே. இல்லை, நான் முழுக்க தவருகச் சொல்கிறேனு?

ஆனல் அத்தகைய திட்டத்துக்கு தற்போதுள்ள சாதனம் எப்படி ஈடுகொடுக்கமுடியும்? சுத்த விமர்சன கட்டுரையை யார் மேல்பார்வை இடுவார்கள்? எந்த அளவு கோலைக்கொண்டு அது குறிக்கப்படும், ஏற்கப்படும் அல்லது ஒதுக்கப்படும்? இதுக்கு பதில் சொல்ல எனக்கு முடியாது. விமர்சனத்தை விமர்சிக்கத் தக்கவன் ஒரு விமர்சகன்தான் என்ருல் பல்கலை கழகங்களில் போதிய விமர்சகர்கள் இல்லாவிட்டால் ஒரு சிலரை அமர்த்தலாமே. நான் முழுக்க அவர்கள் எதுவும் செய்யஇராவிட்டாலும் விமர்சன கோட்பாடு சம்பந்தமாக அடிப்படை அம்சங்கள் பற்றி விவாதங்கள் நடத்தலாமே ஏதானுலும் இந்த திட்டம் பல்கலைக் கழக இங்கிலீஷ் விற்பன்னர்கள் வாழ்வை லகுவானதாக ஆக்கிவிடும் என்று நான் சொல்ல வரவில்லை. நான் சொல்வதெல்லாம், நாம் கடைப்பிடித்தால் உபயோககரமான வேலை செய்யப்படுவதுக்கு வாய்ப்பு ஏற்பட இடம் இருக்கிறது என்பது தான். உதாரணமாக போப் பற்றி ஒருவர் சிறந்த விமர்சனக் கட்டுரை எழுத ஒரு ஆண்டு செலவழிக்க முன்வந்தால், போப்பை பற்றி எல்லாம். எழுதி முடிந்தாகிவிட்டது, அரை டஜன் பேர்கள் ஏற்கெனவே அதில் ஈடுபட்டிருக்கிருர்கள், என்று சொல்வதுக்கு பதில், நீயும் செய்யேன் என்றுதான் நாம் சொல்ல வேண்டும் மோசமாகப் போனுலும் அவன் கட்டுரை பட்டம் பெறத் தகுதி இல்லாது போனுலும்போதிக்கவாவது அவனை தயார்ப்படுத்தி இருக்குமே. ஆனல் இது மட்டுமே திட்டமாக நிச்சயம். முடிவாக, மேற்கொண்டு விவாதத்துக்கே இடமில்லை. அதாவது தன் வாழ்வின் முக்கியமான மாதங்களில் சிலதை கைப்பிரதிகளை பாதுகாப்பது, சேகரிப்பது, எலிஸபெத் கால நூலாசிரியர்கள் S களுக்கு பதில் F களை எழுதினர்கள் என்பது பற்றிய சொற்பொழிவுகளை கேட்பதில் செலவழித்திராதவர்கள் எங்கும் இங்கிலீஷ் இலக்கியம் போதிக்கவே முடியாது என்று ஆகிவிட்டது ஆனுலோ, முக்கியமான விஷயங்கள், உதாரணத்துக்கு இலக்கிய, ஒழுக்க மதிப்புத்தீர்ப்புகளிடையே ஒன்றுக்கொன்று ஊடுருவி நிற்கும் பிரச்னை போன்றவை பற்றி எதுவும் எழுதப்படவே இல்லை.

இந்த சில குறிப்புகளில் பல்கலை கழகத்தில் விமர்சகன் வேலைபற்றி முடியக்கூடிய யோசனை கூறி இருக்கிறேன். தற்போதைய நிலவரத்தில் ஒருவருக்கு மற்றவர் எவ்வளவு உபயோகமாக இருக்கிருர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. எதுவும் இல்லை.

எழுத்து பிரசுரம் வெளியீடுகள்

ஜீவனும்சம்

சி. சு. செல்லப்பா

ரூ. 4-00

காட்டுவாத்து

ந. பிச்சமூர்த்தி

ரூ. 5-00

அறுபது

சி. சு. செல்லப்பா

ரூ. 5-00

புதுக் குரல்கள்

தொகுப்பு

ரூ. 4-00

எதற்காக எழுதுகிறேன்?

தொகுப்பு

ரூ. 2-00

எழுத்து பிரசுரம்

19-A பிள்ளையார் கோவில் தெரு

சென்னை-5.

எழுத்து அரங்கம்

'தீ' பற்றி

நாற்பத்தொன்பதாவது 'எழுத்து' இதழில் "விவாகரத்துக்கு உள்ளாகி யிருக்கும்" கதை ஒன்று பற்றிய கட்டுரை சில அடிப்படை விஷயங்களை நோக்கி கேள்வி எழுப்புகிறது.

"தீயை ஒரு பூரணமாக வளர்ந்த நாவலாகவோ, அல்லது ஓர் இலக்கிய சகாப்தமாகவோ காணத் தேவையில்லை. அப்படி ஒன்றைச் சாதிப்பது ஆசிரியரின் நோக்கமும் அல்ல. "இந்த வரிகளைப் படித்ததும் டி. எச். லாரன்ஸ் எழுதின 'லேடி சாட்டர்லீயின் காதலன்' கதையில் ஆசிரியர், 'உடல் மட்டும் காதல் என்பது எவ்வளவு ஆபாஸமோ அதேபோல் உள்ளம் மட்டுமே காதல் என்பதும் ஆபாஸம்' என்ற, கருத்தை வலியுறுத்த மட்டுமே நாவலைக் கையாண்டு கலையுருவைத் தியாகம் செய்தது நினைவு வந்தது. டி. எச். எல்.லின் இந்நாவலின் வெற்றி அவரது கருத்தின் பிரச்சார வலுவில் நிற்பது. கலையாக அல்ல. அது மேல்நாட்டு இலக்கிய உலகம் ஒப்புக்கொண்ட விஷயம். ஆனால் நம் கட்டுரைகாரருக்கு அது போதவில்லை. "அது ஓர் பூரணமாக வளரப் போகும் நாவலுக்கு, இலக்கிய சகாப்தத்துக்கு அறிமுகம்" என்றும் சேர்த்துக் கொள்ளும் போது முன்னையவரிக்கு முரண்படுகிறார். டி. எச். எல்.லின் நோக்கு முழுக்க முழுக்க சமூகசீர்திருத்தம் சம்பந்தமானது. அவரது நோக்கத்திலோ, (அவருக்கு இவ்வளவு நாட்களுக்குப் பின்னும் சரி,) இலக்கிய உலகம் படைப்புலகம் பற்றி அக்கறை கொள்ளவில்லை. ஏனெனில் அவர் கருத்து சமூகத்தில் பரவி, சமூகம் ஊட்டும் அநுபவத்தின் மூலமே கலைஞன் உள்ளத்தில் உருப்பெற்று கலையாகவேண்டும். கருத்து—சமூகம்—கலை என்று நிரைபட்டு நிற்கும் மனோதர்மம்—ஸைக்காலஜிக்கல் நியதி—இது தான். ஃபிராய்ட் தமது உள்மனம், தாய்மீது காமம் கொள்ளும் மனநோய் (ஓடிப், பஸ் காம்ப்ளெக்ஸ் பற்றியெல்லாம் தைரியமாகப் பேசு முன்பே, சமூகத்தை நுண்மையாக அவதானித்த கலைஞர்கள் அன்றைய ஷேக்ஸ்பியரிலிருந்து இன்றைய டி. எச். எல். வரை, தமது 'மாக்பெத்', 'ஸன்ஸ் அன் லவர்ஸ்' போன்ற நூல்களில் இந்த மனநோயை அவதானித்து கலைத்திறல் செய்துவிட்டார்கள். ஏற்கெனவே கலைநுட்பத்தால் கண்ட ஒன்றை ஃபிராய்ட் நியாய பூர்வமாகப் பேசினார். எனவே ஃபிராய்ட் கருத்துக்கள் அவராகக் கண்டுபிடித்த வானத்துப் புதுமையல்ல. உண்மைகள்தான். பிரெஞ்சு உள நூல் மேதை ஜூல்ஸ்ரோமனும் உள நூல்கள் குறிப்பிடும் உண்மைகள் சாமானிய உண்மைகளென்கிறார்—உண்மை ஹிந்து வர்க்கத்துக்கும் உண்மையே. நாம் பேச்சு வழக்கில் ஆபாஸமாகத் திட்டுவதுக்கு 'தாயைப் புணர்ந்தவன்' என்ற பொருளில் இதை உபயோகிக்கும்போது 'ஓடிப் பஸ் காம்ப்ளெக்ஸ் காரன் என்றே தொனிக்கிறோம். ஆகவே ஃபிராய்ட் கருத்துகளை சமூக அக்கறைகொண்ட நம்மவர்கள் தன்மையறியாமலே ஏற்கெனவே அவதானித்திருக்கிறார்கள். புராணங்களில்கூட இதுபோன்ற கருத்துக்களின் மூலச்சரக்கை அவதானித்த அடையாளங்கள் "தாய்போல் மனைவிவேணும்" என்ற விநாயகர் (இங்கு ஓடிப் பஸ் காம்ப்ளெக்ஸ், ஃபிராய்டின் பாஷையில் உற்பூதப்படுத்தப்பட்டு'ஸப்லிமேட் பண்ணப்பட்டுள்ளது) போன்றாரது கதைகள் உள. இத்தகைய கருத்துக்களே நம்முன் ஆராயப்பட்டிருக்கையில் ஸெக்ஸின், பாலுணர்ச்சியின் வீர்ய 'லிபடோ' ஆராய்ச்சிக்குக் குறைவிருந்ததில்லை.—காமசூத்திராசிரியன் வாத்ஸ்யாயனை நாமதான் உலகுக்கு அளித்தோம். அவனது ஸெக்ஸ் கருத்துக்கள் வெள்ளைக்காரனை எவ்வளவு கவர்ந்திருக்கின்றன என்று நம் கட்டுரையாளருக்கு தெரியாதா? மலைகல்லி எலிபிடித்த மாதிரி பிரஸ்தாப'நாவல்'ஆசிரியர் செய்திருப்பதாகக் கட்டுரையாளர் குறிப்பிடுவதை நமது சிந்தனையாளர்கள் துவக்கத்திலேயேகண்டுபிடித்தவர்கள்காதல்கற்பு' எல்லாம் வெறும் ஸெக்ஸ் என்பது நமக்கு வானத்துப் புதுமைக் கருத்தோ ஆபாஸக்கருத்தோ அல்ல. இந்த நாவல் இவ்வளவு ஆர்ப்பாட்டத்தில் 'சொல்வதை கலையைத் தியாகம் செய்யாமல் கலையுருவாகவே புதுமைப்பித்தனின்'பொன்னகரம்' சாதித்துவிட்டது: "கற்பு கற்பு என்கிறீர்களே—இதுதானய்யா பொன்னகரம்." இதுக்கும் முன்னால் நம் புராணங்களும், கோயில் சிற்பிகளும் சொல்லிவிட்டார்கள். 'விறலிவிடு தூது' போன்ற நூல்களும் நம்முடையவைதான்.

ஆனால் கட்டுரையாளர் கட்டுரை முடிவில் "இனிக் கற்பையும் காதலையும் போற்றுவதும் விடுவதும் அவரவர் விருப்பம்" என்று, பாலுணர்ச்சிதான் இவையெனத் தாமும் தாம் ஆராயும் நூலும் வரையறுத்து ஆணியடித்துவிட்டதாக திருப்திகொண்டு அவரே 'குள்ளச் சந்தோஷம்' கொள்கிறார். இதன் பின்னால் என்ன? அதையல்லவா நாம் தேடுகிறோம். ஹிந்து சிந்தனைப் போக்கு, ஸெக்ஸ்தான், அல்லது ஹிந்துவின் மரபான பாஷையில், **சிற்றின்பம்** தான் மனிதனை உந்துகிறது என்று கண்ட பிறகு அதற்குப் பின்பும் சிற்றின்பத்தையே தேடிப்போகவில்லை. ஆனால் ஃபிராய்டின் கருத்துக்களை அறிந்திருப்பதாக கட்டுரையாளர் குறிப்பிடும் மேற்கத்திய நாடுகள் விஷயத்திலோ?

பரிதாபநிலை என்னவென்றால், மேற்கத்திய நாட்டை ஆட்டுவது ஃபிராய்டின் கொள்கையை ஏற்றுக்கொண்ட மனோநிலையல்ல. பாலுணர்ச்சிக்கு, ஏன் துக்கத்தை இழவு வீட்டில் அழுது தீர்க்கவே தடையிடும் கத்தோலிக்க மதம்தான். பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் அற்புதமாக, கத்தோலிக்க மதம்,ஏன் முழுக் கிறிஸ்தவப் பார்வையே எப்படி அவர்களைப் பாதித்திருக்கிறது என்பதை கீழை நாடுகளின் அனுஷ்டானங்களோடு ஒப்பிட்டு, "மேற்கு நாடுகளில் மதச்சட்டங்கள் வெகு உயர்வானவை—ஆனால் அனுஷ்டிக்கும் வாழ்க்கை கேவலமானது. கீழை நாடுகளில் மதச்சட்டங்கள் சாமானியமானவை—ஆனால் அனுஷ்டிக்கும் வாழ்க்கை உந்நதமானது." என்று ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார். கிறிஸ்தவ சமூகத்தின் சட்டதிட்டங்களின்படி கத்தோலிக்க கோவில்களால் உலகெங்கும் குறிப்பான புஸ்தகங்கள் (உதாரணமாக டி. எச். எல்., மாபஸான் போன்றாருடையவை) படிக்கப்படக்கூடாது என்று லிஸ்ட்வகுக்கும் அளவு "உந்நதமான" பார்வை அவர்களுடையது. எனவே

அவற்றுள் கட்டுப்படுபவனின் இச்சைகளுக்கு விடுதலை (Relief) கிடைப்பதில்லை. விளைவாக, அவ்வித இச்சைகளை நிறைவேற்றும்போது உள்மனம் புரட்சி செய்கிறது. இதனால் மனநோய்—காம்ப்ளெக்ஸ் உண்டாகிறது. இதன் காரணமாக மேல் நாடுகளில் தான் மனநோய் கேஸ்களும் அதன் விளைவான மன அலசல் வளர்ச்சியும் அதிகம் என்பது கண்கூடு. ஆனால்,

நம் கோவில்களுக்குள் போனாலே உள் மனத்தில் அமுக்கி வைத்ததை விடுதலை Relief அடைகின்றன. நிர்வாணம் என்பது சாமானிய இயற்கை என்பதை நம் கோவில் கலை பச்சையாகச் சொல்லி விடுகிறது. எனவே மனசுள் அழுந்திப் புதைப்பதில் ஏற்படும் காம்ப்ளெக்ஸிற்கு இடமில்லை. ஃபிராய்டுக்கும் அதிக வேலையில்லை. இது நம் நாவலாசிரியருக்கு தெரிந்திருக்குமா என நினைக்கிறேன்.—ஏனெனில் அவர் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவர்.

"இனிக் கற்பையும் காதலையும் போற்"றாமல் விட்டுவிட்டு, மிருக இயல்போடு வாழவேண்டுமென்றுதான் நம் பிரஸ்தாப நாவல் குறிப்பிடுவதாக கட்டுரையாளர் தொனிக்கிறார். நாமோ கற்பையும் காதலையும், அதன் விளைவான பந்தத்தையும் பாசத்தையும், அதன் விளைவாக உலக நியதிகள் யாவற்றையும் ஹிந்து பாஷையில் 'சம்ஸாரம்' என்று குறித்து ஒதுக்கிவிடும் வாழ்க்கைக்காரர்கள். 'ஸெக்ஸ்' என்பது உடலோடு தான்.—"ஆண் பெண் என்ற வித்யாசத்தில்தானே பாலுணர்ச்சி? அந்த வித்யாசம் உடலின் வித்யாசம். உடலோடு ஒட்டி நிற்கும் உணர்வை ஆத்மாவில் நிலைக்கச் செய். அங்கு உடலில்லை. ஆகவே பேதமில்லை. ஆகவே 'பாலுணர்ச்சியில்லை" என்ற ரமண மஹரிஷியின் வாக்கு, கற்பு, காதல் பற்றிய நம் கட்டுரைக்காரரின் மலைகல்வி எலிபிடித்த முடிவுகளுக்கும் அப்பால் நிற்பது. அங்கு இந்த ஃபிராய்டின் நிலை என்ன? மனம் அற்ற நிலையில் மனவியல்கர்ரன் எங்கே? அங்கு ஹிந்துவின் பயணம். வெறும் மிருக வாழ்வுக்கல்ல.

காதல், கணவன் மனைவியுள் பிணைப்பை கொண்டுவந்து இருவருக்கும் பிறக்கும் குழந்தைகளில் தம் வாழ்வைக் குவித்தல்தான் இந்து தர்மம். அதாவது, சம்சாரத்தின் முக்கிய அங்கமான காதலையும்; சொத்தாக கணவன் மனைவியையும் மனைவி கணவனையும் பாவிக்கும் கற்பையும் ('கற்பு நிலையென்று பேசவந்தார் இரு கக்ஷிக்கும் அஃது பொதுவில் வைப்போம் என்று பாரதிகண்ட ஹிந்து தர்மத்தின்படி) கொண்டால்தான் குடும்பம் பிறக்கசாத்யம் இதன் விளைவானதே பாசம். ஆனால் கண்டிப்புடன் ஆராய்ந்தால் குடும்பங்களில் நம்மிடையேகூட கற்பு காதல் என்பது அவற்றின் முழு அர்த்தத்தில் அனுஷ்டிக்கப்படவில்லை. இதுதான் கட்டுரையாளரின் பலமான பொருள் அங்கம். ஆனால் அதற்காக, அவை அனுஷ்டிக்கப்படாமலேதான் எல்லா குடும்பங்களும் ஏன் மேல் நாடுகளிலேனும் இருக்கின்றன என்று நிரூபிக்க முடியுமா? அப்படி அனுஷ்டிக்காமல் குடும்பங்களைச் சிதறவிட்டு மிருகங்களைப்போல் சேர்வதுதான் 'முற்போக்கு' என்ற தொனியில் தாம் ஃபிராய்யைப் புரிந்துகொண்ட அழகைக் காட்டுகிறார் கட்டுரையாளர்.

கற்பு என்பதை ஒரு சரிக்கட்டல், அதாவது 'திருப்தியடையாத ஸெக்ஸ்' என்று சரிக்கட்டல், செய்தல் என் நாவல் முடிவுகூறுவதாகத் தொனிக்கும் கட்டுரையாளர் உண்மையான முக்கிய அம்சத்தைக் கவனிக்கவில்லை. நாவல் சரிக்கட்டல் (ஃபிராய்ட் சொல்வதுபோல் Rationalize) செய்கிறது ஒன்றை—அதைக் கட்டுரையில் தொடவுமில்லை—நாவலில் அங்கங்கே, கதாநாயகன், தன்னைக் கெடுத்தவர் ஒரு பாதிரியார் என்று சொல்கிறான். தன் தந்தை தன்னை அடக்கியதுதான் தனது செக்ஸின் வழி தவறிய போக்கின் காரணம் என்கிறான். இதுக்கும் மேலே மண் தின்னும் உடலை மனிதன் தின்றாலென்ன என்று, வெறும் பிணத்துக்கும், சமூக விழிப்புள்ள மனத்தோடு உயிருள்ள உடலுக்குமிடையே வித்யாச மறியாமல் சரிக்கட்டல் (Rationalize) செய்கிறான். வாழ்க்கையில் குடும்பத்தில் கற்பு காதல் என்ற நடைமுறை வாழ்வே ஒரு லட்சியம்—ஐடியல்! அந்த ஐடியல்—லட்சியம் எல்லா குடும்பத்தினருக்கு ஏன் இருக்கக்கூடாது?

ஹிந்து சமூகத்தில் (தமிழகம் ஈழம் என்ற போலிப்பிரிவுகளையும் மீறி) காதல் கற்பு என்பது ஐடியல்—லட்சியமாக குடும்பத்தைப் பிணைக்கிறது. ஆனால் 'குடும்பம்' என்பது பற்றியே கட்டுரையாளரோ நாவலோ விசாரத்துக்கு எடுக்கவில்லை. உண்மையில் நாவலின் எல்லை ஒரு முதிர்ச்சியற்ற வாலிப எழுச்சிகளோடு (அடோலஸன்ட் நிலையில்) முடிந்து விடுகிறது. முதிர்ந்த மனிதனையோ இன்னும் உக்கிரமான குடும்ப உறவுகளையோ அவதானிக்கவில்லை. எனவே ஒரு இளைஞனின் கனவுத் தொனித்து மறைகிறது. இத்தகைய முதிர்ச்சியற்ற உறவு நிலையை விவரிப்பதால் சமூக அளவுகோலைப் பாதித்து விடமுடியாது. நிதானம் நிரம்பின டி. எச். எல். வின் மெல்லர்ஸ், லேடி சாட்டர்லீயின் காதலன், நமது நாவலாசிரியரின் பாத்திரத்தைப் போன்ற 'பொடியன்' அல்ல மெல்லர்ஸ் பாத்திரம் முழுமையாக, பிரபு சாட்டர்லீயின் அறிவையும் மிஞ்சிய நூலறிவு, உலக ஞானம் கொண்டவனாக எழும்புகிறது, அவனை வாசகலைல் மெல்லர்ஸ் மூலம் வெளியாகும் டி. எச். எல். கருத்துக்களை விழுங்க முடிகிறது. 'மண் தின்னும் உடலை மனிதன் தின்றாலென்ன' என்று குழந்தைத் தனமாக சரிக்கட்டல் செய்யும் பொடியனுக்கும் மெல்லர்ஸீக்கும் வெகு தூரம் உண்மையில் மெல்லர்ஸ் போன்ற ஒரு எஃகு மனிதனின் குரலில் பேசுவதால் தான் ரிச்சார்ட் ஹொகார்ட் போன்ற சமூகவியல்காரர்கடே டி. எச். எல்லை அக்கறைக்கு எடுக்கிறார்கள். 'புரட்சி' பண்ண வருபவர்கள் இதெல்லாம் அவதொனிக்க வேண்டும்.

கட்டுரையாளர் நம்மிடையே இல்லாத கருத்தென்று கூறிய 'அடிப்படை உணர்ச்சியே பாலுணர்ச்சி' கருத்து நமக்குப் பழசு; சிற்றின்ப புலன் வாழ்வாக நாம் அதை அவதானித்துள்ளோம், என்றேன். இதை அறியாததால் நம்மிடையே கற்பும் காதல் என்று போலிகள் இருக்கு என்கிறார். அதுவும் போலியென எங்களுக்குத் தெரியும். அதோடு, ரஸ்ஸல் வார்த்தை மூலம் போலியுலகு அவரது மேல் நாட்டுலகே என்றும் கண்டோம். "நான் ஒரு பாவி" என்று பிரார்த்திக்கும் மேல் நாட்டுக்கும், "நான் மாசற்ற ஆத்மா—உடலல்ல" என்று புரியவைக்கும்